Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 10 2024

வியாழக்கிழமை ஒக்டோபர் 10, 2024 | ஒளி: 10 கதிர் 069 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## மீண்டும் வெளியேறினார் சாள்ஸ்



எஸ்.ஆர்.லெம்பேட் பாராளுமன்ற பொதுத் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வெளியேறியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வன்னி மாவட்ட களத்தில் வேட்பாளராக மன்னார் தொகுதியில் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் மாத்திரமே உறுதி செய்யப் பட்டுள்ளார்.

மேலும் இரு வேட்பாளர்கள் தெரிவில் தொடர்ந்து இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் எம்.பி. சாள்ஸ் நிர்மலநாதன், தேர்தல் களத்திலிருந்து ஒதுங்குவதாக ஆரம்பத்தில் அறிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

## 21/4 விசாரணைக்கு வத்திக்கான் ஆதரவு



இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க பிரதிநிதி வணக்கத்திற்குரிய பிரையன் உதைக்வே ஆண்டகை (Rev. Dr. Brian Udaigwe) ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (09) சந்தித்தார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற அனுரகுமார திசாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த வத்திக்கான் பிரதிநிதி, கத்தோலிக்க திருச்சபையின் தலைவரும் இறைமைமிக்க வத்திக்கான் அரசின் பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ் அவர்களின் உளப்பூர்வமான வாழ்த்துச் செய்தியையும் ஜனாதிபதிக்குக் கையளித்தார்.

தொடர்ச்சி P2

### பிணை நிபந்தனை உறுதிக்குப்பின்

## வைத்தியர் அருச்சுனாவுக்கு பிணை

எம்.றொசாந்த்



பிணை நிபந்தனைகளை மீற மாட்டேன் என வைத்தியர் அருச்சுனா உறுதி அளித்ததை அடுத்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றினால், புதன்கிழமை (09) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி வைத்தியசாலை முன்னாள் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் அருச்சுனா, தொலைபேசியில் சக வைத்தியர்களை அச்சுறுத்தியமை, சமூக ஊடகங்களில் அவதூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்கு எதிராக சாவகச்சேரி வைத்தியசாலையில் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## மனித புதைகுழி 'ஸ்கேன்' ஆரம்பம்

### முழுத் தடை விதிப்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மன்னார் சதொச மனித புதைகுழி அகழ்வு பணி இவ்வாரம் மீண்டும் இடம் பெறவுள்ள நிலையில் தடய பொருட்களைப் பிரித்தெடுத்தல், புதைகுழியைச் சூழ உள்ள பகுதியை ஸ்கேன் செய்தல், அகழ்வு செய்யும் பணிகள் முதற்கட்டமாக இடம்பெற்று வருகின்றது.

தொடர்ச்சி P2



### நூரளை தபால் நிலையத்தை

## விற்பது இடைநிறுத்தம்

கடந்த 130 வருடங்கள் பழைமையான நுவரெலியா தபால் நிலைய கட்டிடத்தைத் தபால் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காகப் பிரத்தியேகமாக வைத்திருக்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ராமநாயக்கவின் கட்சி உதயமானது

### வடிவேல் சுரேஷும் தாவினார்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தலைமையிலான 'ஐக்கிய ஜனநாயக குரல்' என்ற புதிய அரசியல் கட்சி, கொழும்பில் புதன்கிழமை (09) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

அதில் கலந்துகொண்டு கருத்துரைத்த ரஞ்சன் ராமநாயக்க, "எனது குடியுரிமை நீக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. ஆனால், இம்முறை ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க வாக்குச்சீட்டு கிடைக்கப்பெற்றது.

தொடர்ச்சி P2

## முஜிபுர், மரிக்கார் கொழும்பில் போட்டி





எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம்.மரிக்கார் கையெழுத்திட்டனர்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தில் வைத்து புதன்கிழமை (09) கையொப்பமிட்டனர்.

## "சலுகைகளை குறைக்கும் எண்ணமே இல்லை"



"அரசாங்கத்தினால் முப்படை வீரர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறைக்கப்படுவது தொடர்பில் ஊடகங்களில் தவறான வதந்திகள் பரப்பப்படுவதாக நான் அறிந்தேன். எவ்வாறாயினும், முப்படை வீரர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் எவ்விதத்திலும் குறைக்கும் எண்ணம் தற்போதைய அரசாங்கத்திற்கு இல்லை என்பதை நான் தெரிவிக்கிறேன்" என பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொண்டா (ஓய்வு) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "இல்லங்களில் இனிமேலும் இருந்தால் சட்டம் பாயும்"

உத்தியோகபூர்வ இல்லங்களைத் தொடர்ந்தும் வைத்திருக்கும் முன்னாள் அரசாங்கத்தின் உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஒதுக்கப்பட்ட 41 உத்தியோகபூர்வ இல்லங்களில் 14 வீடுகள் மட்டுமே திருப்பி கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மொத்தமாக 41 குடியிருப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் அதிகாரி தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர்,

தொடர்ச்சி P2

## 'வானத்தில் பாலம்' மூடப்படும்

பதுளை மற்றும் தெமோதரைக்கு இடைப்பட்ட ரயில் பாதையில் காணப்படும் 'வானத்தில் பாலம்' என்றழைக்கப்படும் ஒன்பது வளைவு பாலத்தில் ரயில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய - இலங்கையின் கூட்டுத் திரைப்படத்தின் படப்பிடிப்பு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு கோட்டையிலிருந்து பயணிக்கும் மலையக ரயில்கள் அனைத்தும் ஒக்டோபர் 9ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை எல்ல அல்லது பண்டாரவளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.



இந்நிலையில், ஒக்டோபர் 9ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை காலை 7.30 மணி முதல் மாலை 5:30 மணி வரை ரயில்கள், பதுளை ரயில் நிலையத்திற்குச் செல்லாது.

மேலும், கொழும்பு கோட்டை நோக்கிப் பயணிக்கும் ரயில்கள் பதுளை ரயில் நிலையத்திற்கு மாறாக எல்ல அல்லது பண்டாரவளை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## 21/4 விசாரணைக்கு வத்திக்கான் ஆதரவு

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ், இலங்கை வெற்றி மிக்க மற்றும் சுபீட்சத்தை நோக்கிப் பயணிக்கும் எனத் தெரிவித்த வத்திக்கான் பிரதிநிதி உதைக்வே ஆண்டகை, அதற்காகத் தாம் மனமார வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்காலம் குறித்து தனது சாதகமான கருத்தை வெளிப்படுத்திய உதைக்வே ஆண்டகை, மக்கள் எதிர்பார்க்கும் வகையில் நாட்டில் ஏற்கனவே சிறப்பான அபிவிருத்திகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டார். அது தொடர்பான ஜனாதிபதியின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அர்ப்பணிப்பைப் பாராட்டிய அவர், அந்த முயற்சிகள் அனைத்திற்கும் வத்திக்கான் ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்ட மிகவும் மோசமான அனுபவமான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் (21/4) குறித்து தனது வருத்தத்தைத் தெரிவித்த உதைக்வே ஆண்டகை, அது தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் முயற்சியையும் பாராட்டினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி மற்றும் நியாயத்தை வழங்குவதற்காக ஜனாதிபதியின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கு வத்திக்கானின் முழு ஆதரவையும் வழங்குவதாக உதைக்வே ஆண்டகை உறுதியளித்தார்.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகள் தொடர்பில் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இலங்கை நாடு மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்காக இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதியும் வத்திக்கான் பிரதிநிதி உடன்பாடு தெரிவித்தனர்.

## வைத்தியர் அருச்சுனாவுக்கு பிணை

குறித்த வழக்கில் வைத்தியர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த வழக்கு விசாரணையின் போது, பிணை நிபந்தனைகளை மீறியமை, ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவறியமை உள்ளிட்ட காரணங்களால் பிணை இரத்து செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அந்நிலையில் கடந்த வாரம் அருச்சுனாவின் சட்டத்தரணி நகர்த்தல் பத்திரம் மூலம் மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்த நிலையில் அதற்கான கட்டளை வியாழக்கிழமை(10) வழங்கப்படும் என மன்று திகதியிட்டிருந்தது.

இந்நிலையில் புதன்கிழமை (09) மீண்டும் நகர்த்தல் பத்திரம் மூலம் மன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட நிலையில், வைத்தியர் இனி வரும் காலங்களில் பிணை நிபந்தனைகளை மீற மாட்டார் என உறுதி அளிக்கப்பட்ட நிலையில் இரண்டு ஆள் பிணையில் செல்ல மன்று அனுமதி அளித்தது.



## மனித புதைகுழி 'ஸ்கேன்' ஆரம்பம்

மன்னார் சதொச வளாகத்திற்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருந்த பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டிடம் அமைந்துள்ள பகுதியிலும் அகழ்வு பணிகள் புதன்கிழமை (9) இடம்பெற்றன.

இருப்பினும் குறித்த அகழ்வு பணி தொடர்பான செயற்பாடுகளையோ, ஸ்கேன் செயற்பாடுகளையோ புகைப்படம் எடுக்க, காணொளியாகப் பதிவு செய்யவோ மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவே சதொச மனித புதைகுழி அகழ்வு பணியைச் செய்தி சேகரிக்க பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக குறித்த அகழ்வு பணி தொடர்பான உண்மையான விடையங்களை அறிக்கையிடவும் அகழ்வு செயற்பாடுகளை ஆவணப் படுத்தவும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

என்ற போதிலும் புதிய நீதிபதியினால் தற்போது அகழ்வு பணியையோ அல்லது புதைகுழி தொடர்பிலான ஏனைய செயற்பாடுகளையோ காணொளியோ, புகைப்படமே எடுக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த அகழ்வு தொடர்பிலும், புதைகுழி வழக்கு தொடர்பிலான செயற்பாடுகள் தொடர்பிலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகள் குரல் பதிவுகளை வழங்க மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



## விற்பது இடைநிறுத்தம்

அத்துடன், சுற்றுலா தொடர்பான முன்னாள் அரசாங்கத்தின் திட்டங்களை இடைநிறுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்தை அறிவித்த அமைச்சர் விஜித ஹேரத், நுவரெலியா தபால் நிலையச் சொத்துக்கள் தபால் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் பாதுகாக்கப்படும் எனவும், வேறு எந்த நோக்கத்திற்காகவும் விடுவிக்கப்பட மாட்டாது என தெரிவித்தார்.

அத்துடன், நுவரெலியா தபால் நிலைய சொத்துக்கள் தொடர்பில் முன்னர் எடுக்கப்பட்ட அனைத்து தீர்மானங்களும் இடைநிறுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## ராமநாயக்கவின் கட்சி உதயமானது

ஆகவே, என்னால் தேர்தலில் வாக்களிக்கவும் ,போட்டியிடவும் முடியும்" என தெரிவித்துள்ளார்.

நடிகரும், அரசியல்வாதியுமான ரஞ்சன் ராமநாயக்கவும், இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டி.எம்.தில்ஷானும் இணைந்தே மைக் சின்னத்தில் ஐக்கிய ஜனநாயகக் குரல் (UDV) என்ற புதிய அரசியல் கட்சி ஆரம்பித்துள்ளனர். இக்கட்சியின் தலைவராக ரஞ்சன் ராமநாயக்கவும் ,டில்ஷான் தேசிய அமைப்பாளராகவும் உள்ளனர்.

இதில், இணைந்துகொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் " ஐக்கிய ஜனநாயக குரல்" கட்சி ஊடாக பொதுத்தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார்.

"மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியின் ஊடாக தீர்வு பெறுவோம். மலையக மக்களை ஏமாற்றிய அரச தலைவர்களை மக்கள் துண்டித்துள்ளார்கள். இனியும் எம்மக்களை ஏமாற்ற முடியாது" என்றார்.

## "சலுகைகளை குறைக்கும் எண்ணமே இல்லை"

ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டேயில் அமைந்துள்ள இலங்கை விமானப்படைத் தலைமையகத்திற்குத் தனது முதல் விஜயத்தைத் திங்கட்கிழமை ( 07) மேற்கொண்டார். அதன்பின்னர் விமானப்படை வீரர்களிடம் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளுடன் பாதுகாப்புச் செயலாளர் விமானப்படை தலைமையகத்தின் பல பிரிவுகளுக்கு விஜயம் செய்தார்.



## "இல்லங்களில் இனிமேலும் இருந்தால் சட்டம் பாயும்"

உத்தியோகபூர்வ இல்லங்களைத் திரும்பப் பெறுவதற்கான அறிவிப்பை பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சகம் வெளியிட்டது.

எவ்வாறாயினும், இதுவரை 14 குடியிருப்புகள் மட்டுமே மீளக் கையளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளத் துரிதப்படுத்தியுள்ளது.

## மீண்டும் வெளியேறினார் சாள்ஸ்

எனினும், ஆதரவாளர்களின் வற்புறுத்தல்களால் பொதுத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடுவதாக அறிவித்தார். எனினும், அதிலிருந்து வெளியேறுவதாக, செவ்வாய்க்கிழமை (08) அறிவித்துள்ளார். இந்த நிலையில் மன்னாரிலிருந்து மேலும் இரு வேட்பாளர்களைத் தெரிவு செய்ய மன்னார் தமிழரசுக் கட்சி கிளை தொடர்ந்து பல்வேறு முயற்சிகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும் பலர் தமிழரசுக் கட்சியினால் வேட்பாளராகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள போதும்,இதுவரை அவர்கள் தமது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை என தெரிய வருகிறது.

இந்நிலையில் வன்னித் தேர்தல் தொகுதியில், தமிழரசுக் கட்சியின் முடிவு, வியாழக்கிழமை(10) இறுதி படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நடிகை தமிதா போட்டி

பிரபல நடிகை தமிதா அபேரத்ன பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்து ஆவணங்களில் கையெழுத்திட்டுள்ளார்.

இது தொடர்பில் தமிதா அபேரத்னவிடம் வினவியபோது, துன்பப்படும் மக்களுக்காக சில பணிகளைச் செய்யவே அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்ததாகத்



தெரிவித்தார். மேலும், மக்கள் மற்றும் குறிப்பாகக் கலைஞர்களின் பிரச்சினைகள் குறித்து தனக்கு நல்ல புரிதல் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## யாழில் குதித்தார் காசிலிங்கம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் ஜி. காசிலிங்கம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில், புதன்கிழமை (09) கையொப்பமிட்டார்.

### இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பினைப் பலப்படுத்துவதற்காக

## அமெரிக்க அட்மிரல் இலங்கைக்கு விஜயம்

நட்சத்திர அமெரிக்க கடற்படை அட்மிரலும் அமெரிக்க பசிபிக் கப்பற்படையின் கட்டளைத் தளபதியுமான அட்மிரல் ஸ்டீவ் கேலர், ஒக்டோபார் 10ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதை அறிவிப்பதில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மகிழ்ச்சியடைகிறது. 2021ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த அதியுயர் அதிகாரியொருவர் இலங்கைக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பம் இதுவாகும். தனது விஜயத்தின் போது, நீடித்த, மீண்டெழும் தன்மையுடைய, சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் பிராந்தியத்தினைப் பேணிப்பாதுகாப்பதற்காக அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமிடையே காணப்படும் வலுவான பங்காண்மையினை அடமிரல் கேலர் மீள வலியுறுத்துவார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் பாதுகாப்பு சவால்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவும், கடல்சார் கள விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் பேரனர்த்தங்களின் போதான பதிலளிப்பு நடவடிக்கைகளிலும் ஒத்துழைப்பினை பலப்படுத்துவதற்காகவும், நாடுகடந்த அச்சுறுத்தல்களை முறியடிப்பதில் இலங்கைக்கு உதவி செய்வதற்கான அமெரிக்காவின் உறுதிப்பாட்டை மீள வலியுறுத்துவதற்காகவும், மற்றும் அமெரிக்க மற்றும் இலங்கை இராணுவங்களுக்கிடையே வளர்ந்து வரும் ஒத்துழைப்பு தொர்பாக கலந்துரையாடுவதற்காகவும் அட்மிரல் கேலர் சிரேஷ்ட இலங்கை அதிகாரிகளுடன் சந்திப்புகளை மேற்கொள்வார்.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதியினையும் ஸ்திரத்தன்மையினையும் ஊக்குவிப்பதில் ஒரு முக்கிய பங்காளரான இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்துவதில் அமெரிக்கா கொண்டுள்ள வலுவான உறுதிப்பாட்டினை இவ்விஜயம் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் பணிகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு https://lk.usembassy.gov/ எனும் இணைத்தளத்தினைப் பார்வையிடுவதுடன் சமூக ஊடகங்களில் @USEmbassySL இனைப் பின்தொடரவும்.

அட்மிரல் ஸ்டீபன் கேலர், கட்டளைத்தளபதி, அமெரிக்க பசிபிக் கப்பற்படை அட்மிரல் ஸ்டீபன் கேலர் ஒரு கடற்படைக் குடும்பத்தில் வளர்ந்தார். அவர் போல்டர் நகரிலமைந்துள்ள கொலராடோ பல்கலைக்கழகத்திலிருந்து 1986 ஆம் ஆண்டில் பௌதீகவியலில் விஞ்ஞான இளமானிப் பட்டமொன்றைப் பெற்றுக்கொண்ட பட்டதாரியாவார்.








## தேசிய நவராத்திரி விழா...


■ வி.ரி.சகாதேவராஜா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த பணிமன்றமும் சுவாமி விபுலானந்தர் கற்கைகள் நிறுவனமும் இணைந்து நடத்தும் நவராத்திரி விழா, காரைதீவு சுவாமி விபுலானந்த மணி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது..

மேலும், செவ்வாய்க்கிழமை(8) மாலை நடைபெற்ற விழாவானது, பணிமன் உறுப்பினர் த.நடேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.




# பாடசாலையிடம் விளக்கம் கோர தீர்மானம்



தாமரை கோபுரத்திலிருந்து குதித்து மாணவி உயிர்மாய்த்த சம்பவம் குறித்து குறிப்பிட்ட பாடசாலையிடம் விளக்கம் கோர கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

சம்பவம் இடம்பெற்றவுடன், குறிப்பிட்ட பாடசாலைக்கு விஜயம் மேற்கொண்டு, என்ன நடந்தது என்பது குறித்து விளக்கத்தைப் பெறுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாக கல்வியமைச்சின் செயலாளர் ஜே.எம்.திலக ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டில் இயங்குகின்ற சர்வதேச பாடசாலைகள் தனியார் பாடசாலைகள் தொடர்பில் கல்வியமைச்சிற்கு சட்டரீதியான அதிகாரம் இல்லை என தெரிவித்துள்ள அவர், எனினும், அந்த பாடசாலையிடம் விளக்கக் கோரியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் தொடர்பில் கல்வியமைச்சு நடவடிக்கைகளை எடுக்க முடியாது என்பது துரதிஸ்டவசமான விடயம் என குறிப்பிட்டுள்ள கல்வியமைச்சின் செயலாளர் இவ்வாறான பாடசாலைகளைக் கண்காணிப்பதற்காக நாடாளுமன்றம் சில முயற்சிகளை மேற்கொண்டது ஆனால் பொறிமுறை எதனையும் உருவாக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாடசாலையின் அதிகாரிகள் ஒத்துழைத்தால் எனது அதிகாரிகள் தகவல்களைப் பெற்று எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் என கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த பாடசாலைகள் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவர்களுக்கு சட்ட கடப்பாடு இல்லாததால் அவர்கள் விபரங்களைச் சமர்ப்பிக்க மறுக்கின்றனர் என கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தனியார் பாடசாலைகளைக் கண்காணிக்கும் பதிவு செய்யும் அதிகாரத்தை அமைச்சிற்கு வழங்கும் விதத்தில் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.




## பெயர் பலகை திறந்து வைப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பில் இலங்கை இராணுவத்தின் 75ஆவது வருடப் பூர்த்தியினையும் சர்வதேச சுற்றுலா தினத்தையொட்டி மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதி கல்லடி பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கான பெயர்ப் பலகையை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் புதன்கிழமை (08) அன்று திறந்து வைத்தார்.

அம்கோர் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் 243 படைப்பிரிவின் பங்களிப்புடன் இந்த பெயர் பலகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.


மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வரும் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்தப் பிரதேசத்தில் உள்ள இடங்களை இலகுவில் அடையாளம் கண்டு




கொள்வதற்காக இவ் பெயர்ப் பலகை திறந்து வைக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில், 243 படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சந்திம குமாரசிங்க, கெனல் தம்மிக்க, அம்கோர் நிறுவன பணிப்பாளர் ப.முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ. விவேகானந்தன் என பலரும் கலந்து கொண்டனர்.

## அங்குசத்தை தூக்கி எறிந்தார் ஆனந்தகுமார்



ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரான சுப்பையா ஆனந்தகுமார், அக்கட்சியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும், கட்சியின் பொதுச்செயலாளருக்கும் அவர் கடிதம் மூலம் தெரியப்படுத்தவுள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள சுப்பையா ஆனந்தகுமார் கூறியவை வருமாறு,

“2020 பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்த பின்னர் கட்சியை விட்டு பலரும் வெளியேறினர். எனினும், கட்சியின் வளர்ச்சிக்காகக் கஷ்டமான காலகட்டத்திலும் நாம்தான் களத்தில் இறங்கிச் செயற்பட்டிருந்தோம்.

கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர்கூட, எவ்வித கொடுப்பனவும் பெறாமல்தான் பணிகளை முன்னெடுத்து வந்தோம். அரச வாகனங்களைக்கூடப் பயன்படுத்தியது கிடையாது. அரச வளங்களையும் பெற்றது கிடையாது.

எனினும், கட்சியில் உள்ள ஒரு சிலரின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கும் வகையில் இல்லை. அதுமட்டுமல்ல மக்களால் நிராகரிக்கப்பட்ட, ராஜபக்ஷக்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளுக்கு இரத்தினபுரி மாவட்டத்தில் இம்முறையும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கடும் அதிருப்தியில் உள்ளனர். எனவே, இனியும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் பயணத்தைத் தொடரப்போவதில்லை என்ற முடிவை எடுத்துள்ளேன். அந்தவகையில் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் பதவியைத் துறக்கின்றேன். கட்சியிலிருந்தும் வெளியேறுகின்றேன்” என மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




## ஜனநாயக தேசிய கூட்டணி ஆரம்பம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தலைமையில் பல குழுக்களால் உருவாக்கப்பட்ட ஜனநாயக தேசிய கூட்டணி புதன்கிழமை (08) அன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.குறித்த கட்சி கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளது.

## 74 காட்டுன்களுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுக்களுடன் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் புதன்கிழமை (09) கைது செய்யப்பட்டுள்ளார்.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரின்



பயணப் பொதியிலிருந்து 14,800 சிகரட்டுகள் அடங்கிய 74 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஆற்றில் மூழ்கி தொழிலாளி மரணம்

■ பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு-மாவடி ஓடைநெடிய பொத்தானை பகுதியிலுள்ள ஆற்றில் மூழ்கி தொழிலாளி ஒருவர் செவ்வாய்கிழமை (08) மாலை உயிரிழந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு- தாழங்குடா பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய தம்பிராசா சிவஞானம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், அவர் காக்கை வலிப்பு நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் நெல் வயலில் வரம்பு கட்டும் வேலைக்காக நெடிய பொத்தானை பிரதேசத்திற்கு வந்திருந்த குறித்த நபர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது வலிப்பு ஏற்பட்டதன் காரணமாக விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.



# திறந்த சமூக உரையாடலில் சீர்திருத்தங்களை தீர்மானிக்கவும்

நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில், அறுதி பெரும்பான்மையைப் பெறுவதற்கு புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றுவதற்கு சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் தீவிரமாகக் களத்தில் இறங்கியுள்ளன.

வடக்கில்,கிழக்கில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை அப்படியே தக்கவைத்துக்கொள்ள முயலுகின்றனர். எனினும், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் பல அணிகளாகப் பிரிந்துநின்றே, மக்கள் முன் செல்கின்றனர். மலையகத்தையும் ஏனைய இடங்களையும் அவதானிக்குமிடத்து, சிறுபான்மை பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளே தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே புதிய முகங்களும் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளன. பழையவர்களும் புதிய கட்சிகளுக்குள் நுழைந்து தேர்தலில் போட்டியிடுகின்றனர். இருப்பது தக்கவைத்துக்கொள்ளப்படுமா? அல்லது இழந்து நிற்கப் போகின்றார்களா? என்பதற்கெல்லாம், தேர்தல் முடிவுகள் மட்டுமே பதிலாகும். எனினும், மக்களை வாக்களிக்கத் தூண்டவேண்டும். இல்லையேல் வாக்கு வீதம் குறைவடையும்.

இதனிடையே புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அதன்பின்னர், புதிய அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்கள் சற்று அதிகரித்தன. இது பொதுத்தேர்தலில் எதிர் அணிகளின், தொனிப்பொருளாக இருக்கக்கூடும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் "அரசு சீர்திருத்தம்" அடங்கும். அந்த முன்மொழிவுகளில் இந்த கடத்தல் பொருளாதாரத்திற்கான தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்கள் உள்ளன. மாற்றத்திற்குத் தேவையான சீர்திருத்தங்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரால் தீர்மானிக்கப்படுவதற்கு முன்பு, அவை திறந்த சமூக உரையாடலில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஏனென்றால் மக்களுக்கு நல்லது கெட்டது எது என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இருக்க வேண்டும். அந்த வெளிப்படைத்தன்மை அரசாங்கத்தின் பொறுப்பு என்றாலும், அது வெளிப்படையாக நடைபெறுவதை உறுதி செய்வது பொறுப்பாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் வரிவிதிப்பில் மிகவும் ஜனரஞ்சகமான மாற்றம் பற்றியது. நிபந்தனைகளைத் தளர்த்த முடியுமா என பேசுவதாக வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு பற்றிக் கூறப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்தைய பேச்சு அப்படி இருந்தது.

"சீர்திருத்தங்களைத் தொடர அதிகாரிகளின் அர்ப்பணிப்பால் நாங்கள் ஊக்குவிக்கப்படுகிறோம்" என்று சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை கூறுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், செப்டம்பர் 19 அன்று ஜனாதிபதி விக்ரமசிங்கவினால் அவசரமாக ஒப்புக் கொள்ளப்பட்ட "கடன் இலக்கு திட்டம்" மற்றும் "கொள்கை உடன்படிக்கைகள்" ஆகியவற்றின் விதிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து, சர்வதேச மறுசீரமைப்புக்குத் தயாராக இருப்பதாகக் கூறுகிறது.

அந்த ஒப்பந்தங்களின்படி இறையாண்மை பத்திரங்கள். நிதியத்தினால் தயாரிக்கப்பட்ட விக்ரமசிங்க ஆட்சியினால் கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதார நடைமுறையே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் பொருளாதார நடைமுறையாக எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கும். ஆகையால், சீர்திருத்தங்களைத் திறந்த சமூக உரையாடலில் தீர்மானிக்கவும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஜனாதிபதி நாற்காலி ஒரு முள் படுக்கை

முருகானந்தம் தவம்

வரலாற்றுப் பதிவுகளுடன் நடந்து முடிந்த இலங்கையின் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் தலைவரான அனுரகுமார திசாநாயக்க மக்களின் 2ஆவது 'அரகலய' புரட்சி மூலம் 5,634,915 நேரடி வாக்குகள், 1,05,264 விருப்பு வாக்குகள் என்ற அடிப்படையில் 5,740,179 மொத்த வாக்குகளைப் பெற்று ஜனாதிபதிக் கதிரையை அலங்கரித்துள்ளார்.

அனுரகுமார திசாநாயக்கவின் இந்த புரட்சிகர வெற்றிக்கு நாட்டில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல், ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சி அவலங்கள், பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் சுமை அதிகரிப்புக்களுக்கு அப்பால் மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பியதுடன் அனுரகுமார திசாநாயக்க என்ற ஒரு தனிப்பட்ட தலைவர் மீதும் அவரது ஆக்ரோஷமான உரைகள் மீதும் வைத்த நம்பிக்கையின் வெளிப்பாடும் எதிர்பார்ப்பும் பிரதான காரணங்களாகவுள்ளன.

அதனால் தான் கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெறுமனே 418,553 வாக்குகளைப் பெற்று கட்டுப்பணத்தையும் இழந்த அனுரகுமார திசாநாயக்கவுக்குத் தான் இம்முறை பலம் வாய்ந்த ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோரை பின் தள்ளி 5,634,915 நேரடி வாக்குகளை அளித்து நம்பிக்கை,எதிர்பார்ப்பு அடிப்படையில் ஜனாதிபதியாக்கியுள்ளதுடன், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் அதிரடி ஆட்டத்துக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றனர்.

ஆனால் மேடைகளில்,பாராளுமன்றத்தில், ஊடகங்களில் பேசும் ஆக்ரோஷப் பேச்சுக்களை ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்த பின்னர், பேசமுடியாதென்பதையும் முன்னர் வழங்கிய உறுதிமொழிகளை, விடுக்கும் சூளுரைகளை, சவால்களை ஜனாதிபதிக் கதிரையில் அமர்ந்த பின்னர், அவ்வளவு இலகுவாக நிறைவேற்றி விட முடியாதென்பதையும் ஜனாதிபதியாகப் பதவியேற்று இரு வாரங்களுக்குள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க உணரத் தொடங்கியுள்ள நிலையில், அவரிடமிருந்து அதிரடி ஆட்டத்தை எதிர்பார்த்து நம்பிக்கை எதிர்பார்ப்பு வைத்த மக்களிடமிருந்து முணுமுணுப்புக்களும் வெளிக் கிளம்பத் தொடங்கியுள்ளன.

அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானவுடன் ராஜபக்ஷ குடும்பத்தில் சிலர் சிறை செல்வார்கள், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகள் அம்பலப்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவார்கள், மத்திய வங்கி மோசடியாளர்கள் மடக்கப்படுவார்கள், ஊழல், மோசடி அரசியல்வாதிகள், அரச அதிகாரிகளினால் சிறைகள் நிரம்பும், வாழ்க்கைச் செலவுகள் குறைவடையும், வளமான வாழ்க்கை வாழமுடியும் என நம்பிக்கைவைத்த மக்களின் எதிர்பார்ப்புகளை ஓரளவுக்கேனும் நிறைவேற்றக்கூடிய எந்தவொரு அதிரடி அறிவிப்புக்களும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடமிருந்து இதுவரையில் வெளிவரவில்லை.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் வெளியிடப்பட்ட விவசாயிகள், மீனவர்களுக்கான மானிய அறிவிப்புக்கள் கூட தேர்தல்கள் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதியாகவிருந்த ரணில் விக்ரமசிங்கவினால் சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளைக் கடுமையாக விமர்சித்த, அதை வைத்தே ஆட்சிக் கதிரையைக் கைப்பற்றிய அனுரகுமார திசாநாயக்க சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுடன் ரணில் விக்ரமசிங்க செய்து கொண்ட உடன்படிக்கைகளை அச்சுப் பிசகாது தானும் ஏற்றுக்கொண்டு கையொப்பமிடும் சந்தர்ப்பவாத அரசியல் அனுரகுமார மீது மக்கள் வைத்த நம்பிக்கைக்கு எதிர்பார்ப்புக்கு முதல் வேட்டி வைத்துள்ளது.

அதுமட்டுமன்றி, எதிர்க்கட்சியாக அனுரகுமார திசநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி இருந்த போது அரசுக்கு எதிராக முன் வைத்த ஆயிரக்கணக்கான ஊழல். மோசடிக் குற்றச்சாட்டுக் கோப்புகளில் ஒன்றைக்கூட ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இதுவரையில் தூசிகூட தட்ட வில்லை. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை எமக்குத் தெரியும். நாம் ஆட்சிக்கு வந்தால் எமது முதல் வேட்டை அவர்கள்தான் என சூளுரைத்த அனுரகுமார திசநாயக்க இன்று அது தொடர்பில் வாயும் திறக்காமலிருப்பதும் மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

அத்துடன், ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க பதவியேற்றதுடன், இடம்பெற்ற ஆளுநர்கள் நியமனத்தில் மேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டவர் தொடர்பில் பலவேறு விமர்சனங்களும் எழுந்துள்ள நிலையில், அந்த ஆளுநரை அவர் சார் சமூகத்தினர் கூட கடுமையாக விமர்சிப்பதும் ஜனாதிபதியின் செயலாளராக நியமிக்கப்பட்டவர் தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்களும் பண முதலைகளுக்கோ தகுதியற்றவர்களுக்கோ அரச நியமனங்கள் வழங்கப்படாது என அனுரகுமார திசாநாயக்க வழங்கிய உறுதி மொழியையும் அதன் மூலம் மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மீது மக்கள் வைத்த நம்பிக்கை, எதிர்பார்ப்பு வலுவிழந்து சென்றுகொண்டிருக்கும் நிலையில், ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அனுரகுமார திசாநாயக்க, 2 அமைச்சர்களை வைத்துக்கொண்டு எந்த விதமான காத்திரமான நடவடிக்கைகளையும் தற்போது எடுக்க முடியாது. நடைபெறவுள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தலில் தனித்து ஆட்சியமைக்கும் அதிகாரத்தை, பலத்தை அனுரகுமார திசாநாயக்கவுக்கு கொடுத்தால்தான் அவர் தான் கொடுத்த அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றமுடியும். அதனால்தான் அவர் பாராளுமன்றத் தேர்தல் முடியும் வரை காத்திருக்கின்றார். பாராளுமன்ற பலம் கிடைத்தவுடன், அவரின் ஆட்டம் ஆரம்பமாகும் என அவரின் கட்சியினர் சாக்குப் போக்கு கூறத் தொடங்கியுள்ளனர்.

இவர்கள் கேட்டது போல், ஜனாதிபதி பதவியைக் கொடுத்த மக்கள் பாராளுமன்றத்திலும் பெரும்பான்மைப் பலத்தைக் கொடுத்தால் கூட, பெரிதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால் எதனையும் சாதித்து விட முடியாது. ஏனெனில், இலங்கை அரசியல் கலாசாரம் அப்படிப்பட்டது. அரசின் ஊழல், மோசடிகள், தவறுகள் குறைபாடுகள், குற்றங்களை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சிப்பதும் பின்னர் தாங்கள் ஆட்சிக்கு வரும்போது, முன்னைய அரசு செய்த அதே ஊழல்,மோசடிகள், தவறுகள் குறைபாடுகள், குற்றங்களைச் செய்வதும் தான் எழுதப்படாத விதியாகவுள்ளது.

இந்த விதியை மாற்றுவதென்பது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு கல்லில் நார் உரிப்பதைப் போன்றுதான் இருக்கும்.

"நான் அமர்ந்திருக்கும் நாற்காலியின் நான்கு கால்களும் என்னுடையது இல்லை. ஒரு கால் கூட்டணிக் கட்சிக்காரனுடையது. இரண்டாவது கால் சாதிக்காரனுடையது, மூன்றாவது கால், நாம் ஆட்சி நடத்தப் பணம் தருகின்றார்களே, பணக்காரர்கள் அவர்களுடையது. நான்காவது கால் நம் தொண்டர்களினது. இதில் ஒரு கால் போனாலும் நாம் மண்ணைக் கவ்வ வேண்டியதுதான். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடாது. இதை வைத்து அரசியல் பண்ண வேண்டும்" என்று முதல்வன் திரைப்படத்தில் முதலமைச்சராகவுள்ள ரகுவரன் பேசும் பேச்சு இலங்கை அரசியலுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் சாலப் பொருந்தும்.

அதே படத்தில்தான் ஊடகவியலாளரான அர்ஜுனுக்கு பேட்டி கொடுக்கும் முதலமைச்சரான ரகுவரன் கூறும், "ஒரு நாள் சி.எம்மாக இருந்து பார்க்கிறியா...? ஒரு நாள் இருந்து பார் அப்போ உனக்கு என் நாற்காலி ஒரு முள் படுக்கை, என் பதவி ஒரு முள் கிரீடம் என்பது புரியும். என்ன பண்ண முடியும், என்ன பண்ண முடியாது என்பது உனக்கு பளிச்சென்று புரியும். அதை நீ நாட்டு மக்களுக்கு எடுத்து சொல்லு. எவ்வளவு குறை நிறைகள், எவ்வளவு கண்ணீர், எவ்வளவு மாலைகள், எத்தனை டென்ஷன் என்று பதவியில் இருக்கிறவனுக்குத்தான் தெரியும்" என்பார்.

அதேபோன்று, தான் வெளியிலிருந்து ஆட்சியாளரை ஆக்ரோஷமாக விமர்சித்த அனுரகுமார திசநாயக்கவுக்கு தற்போது "ஜனாதிபதி நாற்காலி ஒரு முள் படுக்கை, ஜனாதிபதி பதவி ஒரு முள் கிரீடம் என்பதும், என்ன பண்ண முடியும்? என்ன பண்ண முடியாது? என்பதும் ஓரளவுக்காவது புரிந்திருக்கும்.

அனுரகுமார திசாநாயக்கவுக்கும் இந்தளவுக்கு மட்டும் தான் முடியும் என்பதனை அவர் மீது பெரு நம்பிக்கை, எதிர்பார்ப்பு வைத்த மக்களும் சிறிது காலத்தில் புரிந்து கொள்வார்கள்.

ஆக, மக்கள் தன் மீது வைத்த நம்பிக்கை, எதிர்பார்ப்புக்களினால் எழுச்சி பெற்று எட்டமுடியாத ஜனாதிபதி கதிரையை எட்டிப்பிடித்த அனுரகுமார திசாநாயக்கவுக்கு மக்களின் அந்த அதீத நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே வீழ்ச்சியையும் கொடுக்கக்கூடிய அரசியல் கள நிலைவரம் விரைவில் ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



## வாழ்வியல் தரிசனம்

கத்திப் பேசியே தங்களின் தவறான கருத்துகளைச் சரியானது என வாதிடுபவர்கள் பலருளர். அமைதியாகவும் இனிமையாகவும் பேசி தங்களின் கருத்துகளைக் கூறவேண்டும்.

பேசும்போது கூட, மிரட்டும் தொனியில் பேசுவது அநாகரிகமானது. அமைதியான மனிதர்கள் இத்தகையவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டார்கள்.

பொய்களைப் பேசுபவர்களுக்கு உண்மைகள் எதுவென புரிந்தாலும், அதை ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். கருத்துச் சுதந்திரம் என்பது, கண்டபடி பேசுவதற்கானது அல்ல; சில அரசியல்வாதிகள் எப்படியும் பேசுவார்கள். அத்தகையவர்கள் கேலிக்குரியவர்களாகி விடுவர்.

சிலர் வதந்திகளைக் கேட்கப் பிரியப்படுவார்கள். அவர்கள், தங்களின் பொய்யான பேச்சுகளுடன் வதந்திகளையும் உள்நுழைத்து விடுவார்கள்.

நல்ல வார்த்தைகளுக்கு உயிருண்டு. பொய்களைப் புனைபவர் சமூகத்தில் நம்பிக்கை அற்றவர் ஆகின்றார். பொய், துன்பங்களைப் பிரசவிக்கிறது.

பேச்சுகள் மூலம் ஒருவரைக் காயப்படுத்துவது மகா பாவம். நல்ல நெஞ்சிலிருந்து, அழகான சொற்கள் உற்பத்தியாகின்றன.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

# யானையால் வீடுகள் சேதம்



அம்பாறை- சம்மாந்துறை, தமிழ் பிரிவு 4 - குவாசி நீதிமன்றத்திற்கு முன்னால் உள்ள வீதியில் தனியன் யானை ஒன்று அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சேதங்களை ஏற்படுத்தி வருவதாகச் சேதங்களை அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, தனியன் யானை செவ்வாய்க்கிழமை இரவு (08) திடீரென உட்புகுந்து மக்களின் குடியிருப்புக்களைத் தாக்கி சேதப்படுத்தியுள்ளது.

கடந்த 2 தினங்களாகத் தனியன் யானை ஒன்று சம்மாந்துறை நூலகம், குவாஸி நீதிமன்ற பகுதிகளில் அட்டகாசம் செய்து சேதங்களை விளைவித்து வருவதாகப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

– பாறுக் ஷிஹான்



# மனநலத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது

## (உலக மனநல தினம் ஒக்டோபர்–10)



கனிஷ்ரா ஜெயகாந்தன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

‘பணியிடத்தில் மன நலத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது’ உலகளாவிய ரீதியில் பணிபுரிகின்ற அனைத்து ஊழியர்களும் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு கடந்து செல்ல வேண்டிய விடயமாக பணியிட மன அழுத்தம் காணப்படுகிறது. WFMH (World Federation for Mental Health) ஆரம்பிக்கப்பட்டு, 75ஆவது வருடத்தினை நிறைவு செய்கின்ற இந்த வருடத்தில், பணியிடத்தில் மனநலத்திற்கு முன்னுரிமை என்ற விடயம் முக்கியம் பெறுகின்றது.

அதனை ஒட்டியே “பணியிடத்தில் மனநலத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நேரம் இது” என்பது இவ்வருடத்திற்கான உலகளாவிய மனநல தினத்தின் கருப்பொருளாக அமையப்பெறுகின்றது.

தொழில்துறையில் ஈடுபடுகின்ற சிறு தொழிலாளிகள் முதல் தலைவர்கள் வரை அனைவருக்கும் பணியிடச்சுமை என்பது பெரும் சவாலாகவே அமைகின்றது.

உலகளாவிய மக்கள் தொகையில் 60% மக்கள் பணியில் இருப்பதால், வேலையினால் பல்வேறு வகைகளில் மனநலத்தில் பாதிப்புகள் ஏற்படுகின்றது.

இந்த அபாயங்களைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு இந்த வருடத்திற்கான மனநல தினம் தனக்காக விசேட திட்டங்களை வகுத்துள்ளது, அதனை நடைமுறைப்படுத்துகின்றது. இவ்வருடம் WFMH ஸ்தாபனத்தின் கொள்கைகளுடன் இணைந்து தொழில் முறை அமைப்புகளில் மனநல ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டு அதனைச் செயற்படுத்த அனைவரையும் அழைத்து நிற்கின்றது.

> **கொள்கைகளை இன்றைய தினத்தில் மாத்திரம் நடைமுறைப் படுத்துவதோடு மாத்திரம் நின்று விடாமல், அவற்றை நீண்டகால திட்டங்களாக நடைமுறைக்குக் கொண்டு வருதலால் பணியிடத்தில் ஏற்படுகின்ற சுமைகளை நிவர்த்தி செய்து கொள்ளமுடியும்**

2001ஆம் ஆண்டு அறிக்கையின்படி உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதும் வாழும் சுமார் 450 மில்லியன் மக்கள் மனநலம் அல்லது நரம்பியல் கோளாறுகளால் பாதிக்கப்படுவதாகக் கூறுகின்றது.

பணியிடத்தில் தொழிலாளர்களின் மேல் பணிக்கப்படும் அதிகப்படியான தொழில் அழுத்தங்கள், சக தொழிலாளர்களை மதிக்காமை, சமாந்திரமாக நடத்தாமை, தகுதிக்குத் தக்க வேலை கிடைக்காமை, தொழிற்சாலைக்குள் காணப்படுகின்ற பாராபட்சங்கள், அதிகப்படியான அடைவு மட்டம், நேர முகாமைத்துவம் தன்மை, ஊழல், தொழிலாளர்களுக்குள் காணப்படுகின்ற கருத்து முரண்பாடுகள், உற்பத்தி பொருட்களுக்கான விலையேற்றம், தொழிற்சாலைகளில் காணப்படுகின்ற அரசியல், மனதிற்குப் பொருத்தமற்ற பணியிடம், விருப்பமற்ற தொழில் தெரிவு, சுகயீன காலங்களில் சலுகைகளை வழங்காமை, தொழிலிற்குத் தக்க ஊதியம் வழங்காமை போன்ற விடயங்களின் காரணமாகப் பணி இடங்களில் தொழிலாளர்களுக்கு மன அழுத்தம் அல்லது மனச்சுமை ஏற்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு வகைகளில் மன அழுத்தங்கள் ஏற்படுவதன் காரணமாகத் தொழிலாளர்கள் தங்கள் வேலையில் திருப்தியற்ற தன்மை, சிறந்த பெறுபேறுகளை அல்லது அடைவு மட்டத்தினை அளிக்காமை, தூக்கமின்மை, கோபம், நிம்மதியற்ற வாழ்க்கை, தொழிலில் வெறுப்பு, பதட்டம் போன்றவற்றினையும் அவை தொடர்ந்து கவனிக்கப்படாமல் இருப்பதனால் உளநல பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

எவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்தி ஒவ்வொரு தொழிலாளர்களுக்கும் தேவையான மனநிலை ஆரோக்கியத்தை மேம்படுத்துவது குறித்த நிறுவனங்களில் தலைமை பொறுப்பதிகாரிகளின் முக்கிய கடமையாக அமையவேண்டும்.

பணியிடத்தினை மனதுக்குப் பிடித்தமான இடமாக மாற்றுவதன் மூலம் தொழிலாளர்களிடம் இருந்து உச்சபட்ச பெறுபேறுகளையும் திறமைகளையும் எதிர்பார்க்க முடியும்.

வருடத்திற்கு ஒரு முறையாவது தொழிலாளர்களுக்கு இடையில் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்வதன் ஊடாக தொழிலாளர்களுக்கு இடையில் காணப்படுகின்ற விரிசல்கள் குறைவதுடன் அவர்களுக்கு இடையில் புத்துணர்ச்சியான செயல்பாடுகள் அதிகரிக்க அவை துணைசெய்யும். காலாண்டுகளுக்கு ஒரு முறை பணியாளர்களுக்கு இடையில் சுற்றுப்போட்டிகள், ஒன்றிணைக்கும் கூட்டங்களை ஏற்பாடு செய்யலாம்.

பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல், ஊழியர்களுக்கு இடையில் மதிப்பினை பேணுதல், பணியாளர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்றவற்றினை ஓரளவேனும் செயற்படுத்தினால் தொழிலாளர்களுக்கு பணியிடத்தில் ஏற்படுகின்ற மன ரீதியான பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள முடியும்.

எவ்வாறான கொள்கைகளை இன்றைய தினத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாமல், அவற்றை நீண்டகால திட்டங்களாக நடைமுறைக்குக் கொண்டுவருதலால் பணியிடத்தில் ஏற்படுகின்ற சுமைகளை நிவர்த்தி செய்து கொள்ளமுடியும்.



ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை மாறும்

# ‘அற்புதமான இடம்’



உதயகுமார் ரதிகலா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைகழகம்.

பயணப்படுதல் என்பது வாழ்க்கையில் எல்லோருக்குமே மிகப் பிடித்தமான விடயம். ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில் சற்று நின்று பெருமூச்சுவிட்டு இளைப்பாறிச் செல்லும் ஓர் அனுபவம் தான் பயணப்படுதல். இது இன்றைக்கு உலக நவீன நவீனமயமாதலின் பின் ஏற்பட்ட ஒன்றல்ல ஆதிகாலம் தொட்டு இற்றை வரை தொடரும் செயல்முறையாகக் காணப்படுகின்றது. புவியியல் ரீதியாக ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வேலைப்பளு இல்லாமல் இடம்பெயர்ந்து சென்று வருவது என்று சுற்றுலாவிற்கு ஒரு வரைவிலக்கணத்தை கொடுக்கலாம்.

கீழேத்தேய மேலைத்தேய நாடுகளில் வாழும் அனைவருமே சுற்றுலா விரும்பிகளாகத்தான் இருக்கிறார்கள். தரைவழி, வான்வழி, கடல் வழி மார்க்கங்களினூடாக எல்லோருமே பயணப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். பார்க்கும் மனிதர்கள், இடங்கள், இயற்கைக் காட்சிகள் என்று வீட்டிற்கு வெளியே உள்ள உலகத்தைப் பார்த்து ரசிக்கும் ஆர்வமுள்ளவர்களுக்குப் பயணங்கள் மிகவும் பிடித்தமானவை. சுற்றுலா என்பது இன்னொரு வகையில் நாட்டிற்கு வெளிநாட்டுப் பயணிகளின் மூலமாக அந்நிய செலாவணியைப் பெற்றுத்தரும் பொருளாதார மார்க்கமாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது.

இலங்கை போன்ற நாடுகளில் சுற்றுலாத்துறை மிக முக்கிய தொழிற்துறையாகவும் மாறியுள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறை தெற்கிலும் தென்கிழக்கிலுமே பெரிதும் வளர்ந்துள்ளது. காலி கடற்கரை கண்டி மலைப்பகுதி அனுராதபுர பொலன்னறுவையின் வரலாற்றுச் சிறப்புமிகு இடங்களாகத் தேசிய பூங்காக்கள் பௌத்த விகாரைகள் கடற்கரைகள் முக்கிய சுற்றுலா ஈர்ப்பு தளங்களாகக் காணப்படுகின்றன. அத்தோடு, இலங்கையின் நல்ல காலநிலை இயற்கை அழகு என்பன வெளிநாட்டுப் பயணிகளை ஈர்க்கும் வகையில் அமையப்பெற்றுள்ளன.

அந்த ரீதியில் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக மத்திய மாகாணம் விளங்குகின்றது. மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டம் கடல் மட்டத்திலிருந்து 364 மீட்டர் (1194 அடி) உயரத்தில் அமையப் பெற்றுள்ளது. மத்திய மலைநாடு எழில் கொஞ்சும் அழகுகளை தன்னகத்தே புதைத்துக் கொண்டுள்ளது. மத்திய மாகாணத்தின் காலநிலைக்காகவும் அங்குள்ள இயற்கையான சுற்றுலா வளங்களுக்காகவும் அதிகமான மக்கள் மாத்தளை மாவட்டத்தை நோக்கி வருகின்றனர்.

அந்த வகையில், மனித முயற்சியால் இன்றி இயற்கையாகவே அமைந்த சுற்றுலா தளம் தான் மாத்தளை ரிவஸ்டன். மாத்தளை நகரில் இருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் மாத்தளை ஹெட்டிப்பொல வீதி வழியாக இலுக்கும்புர ஊடாக பயணித்தால் ரிவஸ்டன் உச்சியை அடையலாம்.

இந்த லக்கல பிரதேசம் சிறந்த வரலாற்று மற்றும் அழகியல் முக்கியத்துவம் கொண்ட இடமாகக் காணப்படுகின்றது. அற்புதமான நக்கில்ஸ் மலைத்தொடர் அதற்குச் சுற்றிவர ஓர் அரணாக இருக்கின்றது. வடகிழக்கு பருவமழை காற்றிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்ளும் லக்கலப் பிரதேசம் இரண்டு முக்கிய காலநிலை வலயங்களைக் கொண்டுள்ளது. இங்கு மிக முக்கியமான சுற்றுச்சூழல் அடையாளமாக நக்கில்ஸ் வனப்பகுதி அமைந்துள்ளது.

இம்மலைத் தொடர் அடிக்கடி பனிமூட்டம் அடைவதனால் இது ‘தும்பற மலை’ எனவும் அழைக்கப்படுகிறது. 1981 அக்டோபர் 16ஆம் திகதி முதல் இதுவொரு இயற்கை வன ஒதுக்கீடு என பெயரிடப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வனப்பகுதி உலக மரபுரிமை சொத்தாகும். இது குறைந்த அளவான உள்நாட்டுப் பயணிகளுக்கு மாத்திரமே தெரிந்தவொரு இடமாகக் காணப்படுகின்றது.


வன பாதுகாப்பு அமைச்சினால் பாதுகாக்கப்படும் காடுகளாக இவை காணப்படுகின்றன. முற்று முழுதாக வனாந்தர பகுதியாக இருப்பதனாலும் மாத்தளை மாவட்டத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பதும் ஒரு காரணமாக அமையலாம். இந்த மலையின் உச்சியில் SLT கோபுரம் காணப்படுகின்றது. இந்த மலைத்தொடரில் ஏறுவதற்கு நடைபாதை சாலை காணப்படுவதன் காரணமாக சாதாரணமாக 15 தொடக்கம் 20 நிமிடங்கள் அல்லது அதிகபட்சம் 30 தொடக்கம் 45 நிமிடங்கள் மட்டுமே ஏற வேண்டி ஏற்படும். காடுகள் வழியாக சில குறுக்குப் பாதைகளும் உள்ளன எனினும் நடைபாதை சாலை மாத்திரமே பரிந்துரைக்கப்படுகிறது. மொரஹகந்த, களுகங்கை நீர்த்தேக்கங்களுக்கும் இதன் வழியாகச் செல்ல முடியும்.


பொதுவாக மக்களின் கருத்துப்படி இங்கு ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை காலநிலை மாறுவதாகக் கூறப்படுகின்றது. இங்குள்ள மலைப் பாதைகள் அவ்வப்போது மூடு பனியால் மூடப்பட்டிருக்கும் இங்கு மக்கள் வசிக்கும் கிராமங்களையோ குடியேற்றங்களையோ காண முடியாது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை நக்கில்ஸ் மலைத்தொடர்கள் மட்டுமே காட்சி தரும் அற்புதமான இடமாகும். ஆரம்ப காலத்தில் இந்த இடத்திற்குச் செல்லும் பாதையானது கரடு முரடானதாகவே காணப்பட்டது. எனினும், தற்போது அவை ஓரளவு திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. எனினும் அவை முற்று முழுதாக புனரமைக்கப்படவில்லை. இறத்தோட்டையில் இருந்து செல்லும் பாதை வழியே சிறிய சிறிய கடைகள் காணப்படுகின்றன. இதில் அதிகமான இயற்கை உணவுகள் விற்கபடுகின்றன. இந்தப் பகுதி அதிகமான புகைப்பட கலைஞர்களை ஈர்க்கின்ற ஓர் இடமாகக் காணப்படுகின்றது. இங்கு நிறையச் சிங்கள பாடல்கள் படமாக்கப்பட்டுள்ளன. இந்த சுற்றுலா தளத்தை மையமாகக் கொண்டு பல விடுதிகளும் இயங்கி வருகின்றன. ரிவஸ்டன் வனப்பகுதி எவ்வளவு அழகானதோ அந்த அளவுக்கு ஆபத்தையும் கொண்டுள்ளது. இந்த பகுதியில் அதிகமான இயற்கை விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பாதுகாப்பிற்கான நடைமுறைகள் எதுவுமே இதுவரையிலுமே செயற்படுத்தப்படவில்லை. சமீப காலங்களில் அதிகமானோர் திருமண புகைப்படங்களை எடுப்பதற்காக இங்கு அதிகமாக வருகை தருகின்றனர்.

இந்த மலைத்தொடருக்கு ஏறும் வழியில் சிறிய சிறிய நீர்வீழ்ச்சிகள் ஓடைகள் ஆறுகள் என்பன காணப்படுகின்றன. நக்கில்ஸ் மலைத்தொடரில் உள்ள மற்ற மலைச் சிகரங்களுடன் ஒப்பிடும்போது இங்குச் சமாளிக்கக் கூடிய காலநிலை காணப்படுகின்றது. காலநிலை பொதுவாக அதிகமான குளிர்ச்சியாக இருக்காது. ஆனால், மழைக்காலம் மற்றும் குளிர் மாதங்களில் காற்றின் வேகம் மற்றும் மூடுபனி அந்த பகுதியை முழுவதையும் மூடி திடீரென்று மிகவும் குளிரான இடமாக மாற்றும். குறிப்பாக ரிவஸ்டன் இடைவெளியிலிருந்து அதிக காற்று வீசத் தொடங்கும். இலங்கையின் மலையகங்களில் உள்ள பசுமையான காடுகளில் தனித்துவமான தாவர மற்றும் விலங்கு இனங்கள் இங்கு உள்ளன. பல்லுயிர் பெருக்கம் நிறைந்த பகுதியாகவும் இது காணப்படுகின்றது. எனவே, சூழலியலாளர்கள் உயிரியலாளர்கள், தாவரவியலாளர்கள் மற்றும் பலவகையான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு மிகவும் பொருத்தமான இடமாகவும் இது காணப்படும். அடுக்கு காடுகள் குட்டையான தண்டுகள் தடிமனான தோல் மற்றும் கீழ் மேற்பரப்புகள் கொண்ட இலைகள் அல்லது வெட்டுக்கள் பாசியால் மூடப்பட்ட மரங்கள் ஆகியவை இங்குள்ள சிறப்பம்சங்களாகும். நக்கில்ஸ் நீரோடைகளில் கல்பாண்டியா என்று அழைக்கப்படும் நன்னீர் மீனினத்தை நீங்கள் காணலாம். பல தவளை இனங்கள் பள்ளிகள், பெரிய ராட்சத அணில்கள், ஊதா முகம் கொண்ட குரங்குகள் வாழ்கின்றன இங்கு உள்நுழைவதற்கு அனுமதி கட்டணங்கள் எதுவும் இல்லை நடைபாதை முழுவதுமே ஏறிச் செல்ல வேண்டும். வாகனங்கள் உட்செல்ல அனுமதி அளிக்கப்படவில்லை.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்களது விடுமுறையைக் கழிக்க மிகப் பொருத்தமான இடமாக இதனைக் கூறலாம். இவ்வாறான மலைத் தொடர்களுக்குச் செல்லும்போது அவற்றைத் தூய்மையாகப் பாதுகாப்பது சுற்றுலாப் பயணிகளின் கடமையாகும். வெளிநாட்டுப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில், இதனை சீர்திருத்தச் சீர்திருத்தி உள்நுழைவு கட்டணங்களை வசூலிப்பதன் ஊடாக மத்திய மாகாணத்தின் சுற்றுலாத் துறையையும் மேலும் வளர்ச்சியடையச் செய்யலாம்.

# Bramayugam



பாலசுப்ரமணியம் சமீதா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

இன்றைய சினிமா உலகில் திரைப்படங்களுக்கும் கதையாக்களுக்கும் எண்ணிலடங்காத ரசிகர்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஒவ்வொரு திரைப்படங்களும் ஏதோ ஒரு வகையில் ஒருவரின் மனதில் ஆறாத தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை உடையதாகவும் காணப்படுகின்றது. அந்த வரிசையில் எல்லா மொழிகளிலும் சினிமா துறையின் பங்கு ஏராளம். திரைப்பட ரசிகர்களுக்கு மொழி என்பது ஒரு தடையாக என்றுமே இருப்பதில்லை. அதற்கு மாறாக எல்லா மொழிகளிலும் திரைப்படங்களைக் காண ரசிகர்கள் கூட்டம் குவிந்து கொண்டு தான் இருக்கின்றன. எந்த மொழியாக இருப்பினும் திரைப்படத்தின் கதைக் கருவே ரசிகர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதாகக் காணப்படுகின்றது. அந்த வரிசையில் மலையாள திரைப்படமாக இன்றளவில் ரசிகர்கள் மத்தியில் அதிகம் பேசப்படும் திரைப்படமாகக் காணப்படும் பிரம்மயுகம் என்ற பற்றியதான ஒரு பார்வை தான் இது.

17ஆம் நூற்றாண்டில் நிகழும் ஒரு திகிலூட்டும் மர்மங்களைக் கொண்ட கற்பனைக் கதைகளை ஒத்த மம்மூட்டி நடிப்பில் மலையாளத்தில் வெளிவந்துள்ள திரைப்படம்தான் 'பிரம்மயுகம்' (Bramayugam) . இப்படத்தை இயக்குநர் ராகுல் சதாசிவன் எழுதி இயக்கியிருக்கிறார். பிரபல மலையாள எழுத்தாளர் T.D. ராமகிருஷ்ணனின் எழுத்தில் அமைந்த வசனங்கள் அழுத்தமாக மனங்களில் பதிந்து சென்றுள்ளது. ஏற்கெனவே இந்த சாயலில் மலையாளத்தில் 'குமாரி' (Kumari) திரைப்படம் வந்திருந்தாலும், இது வேறொரு பாணியில் இருக்கிறது. சுமார் இரண்டு மணித்தியாலம் பதினைந்து நிமிடங்களுமாகக் கருப்பு – வெள்ளை காலத்தில் தெற்கு மலபார் பகுதிக்குள் சிக்கித் தவிக்கும் உணர்வோடு Black _White Tone இல் இப்படம் நகர்கின்றது. இத்திரைப்படத்தின் பத்தாவது நிமிடத்திலேயே அந்த கதைக் களத்தில் கலியுகத்தின் ஒரு பகுதியான பிரம்மயுகம் காட்டப்படுகின்றது. இந்த யுகமானது கடவுள் என்ற உருவமே இல்லாத காலமாகவும் கடவுளின் ஆதிக்கம் குறைவடைந்து சாத்தான்கள், பூதங்களின் ஆதிக்கம் இருந்த காலத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவே பிரதிபலிக்கப்படுகின்றது. இதனாலேயே பிரம்மயுகம் என்ற பெயர் இத்திரைப்படத்திற்கு வைத்திருக்கலாம் என கூறிக்கொள்ளலாம்.

எளிமையான ஒரு கதை. மலையாளம் தெரியாதவர்கள் பார்த்தால்கூட எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் இப்படத்தை இயக்கியிருக்கிறார் ராகுல் சதாசிவன். படம் பார்க்கும்போது மலையாளம் தெரிந்தவர்களுக்கு ஏற்படும், அத்தனை பரவசத்தையும் பயத்தையும் மொழி தெரியாதவர்களுக்கும் இந்தப் படம் கொடுக்கத் தவறவில்லை. முழுக்க முழுக்க கருப்பு – வெள்ளையில் படமாக்கப்பட்டுள்ள இப்படம், ஒவ்வொரு




**திகிலூட்டும் மர்மங்கள் நிறைந்த நாட்டுப்புறக் கதைகளில் ஆர்வம் கண்டவர்களுக்கு ஏற்ற திரைப்படம் என்றே கூறலாம்**

காட்சியிலும் மர்மங்கள் நிறைந்த சூழலை உருவாக்கி, பார்வையாளர்களை பதைபதைக்க வைக்கிறது.

கருப்பு – வெள்ளை படம் என்பதால் பார்வையாளர்களின் கவனம் முழுவதும் கதாபாத்திரங்களின் மேல் குவிந்துவிடுகிறது. இதனால், கதாபாத்திரங்களின் சின்ன சின்ன அசைவையும், நகர்வையும் கூர்ந்து கவனிக்க வைக்கிறது. இதனால், பறவைகள், காற்று, கதவுகளின் சத்தம் என நம் காதுகளும், சூரியன், மழை, பந்தம், விளக்கு, சமையல் என நம் கண்களும் படம் முடியும்வரை வியப்படைய வைப்பதாகக் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் படத்தின் கலை இயக்குநர் ஜோதீஷ் சங்கரின் பணி வியக்க வைக்கிறது. படத்தில் வரும் காட்டுப் புற்களும் , மரங்களும் செடிகளும் பிணைந்து கிடக்கும் அந்த ஒரேயொரு பாழடைந்த வீட்டை மட்டும் வைத்துக்கொண்டு கதைக்களம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

17–ம் நூற்றாண்டில் தெற்கு மலபார் வனப்பகுதிக்குள் வழித் தவறி செல்கிறார் பாணர் குலத்தைச் சேர்ந்த தேவன் (அர்ஜுன் அசோகன் ). அப்படிச் செல்லும் அவர் வனத்தினுள் பாழடைந்த வீடொன்றில் தஞ்சம் அடைகிறார். அது மனக்கால் கொடுமன் பொட்டி (மம்மூட்டி) என்பவருக்குச் சொந்தமானது. அங்கு அவரும் அவரது சமையல்காரரும் (சித்தார்த் பரதன்) வசித்து வருகின்றனர். பாணர் குலத்தைச் சேர்ந்த தேவனின் பாடல் பிடித்துப்போக அந்த வீட்டில் தங்கிக் கொள்ள அனுமதிக்கிறார் கொடுமன் பொட்டி.

வீட்டுக்குள் நுழைந்த நாள் முதலே மர்மங்களை உணரத் தொடங்கும் தேவன், ஒருகட்டத்தில் அங்கிருந்து வெளியேற முடிவு செய்கிறார். தனக்குச் சொந்தமான அந்த வீட்டில் தான் நினைக்கும்படி தான் நடந்துகொள்ள வேண்டும் என எச்சரித்துக் கட்டளையிடுகிறார் கொடுமன் பொட்டி. நாட்கள் நகர்கிறது வீட்டைவிட்டுத் தப்பிச் செல்லும் முயற்சியில் தோல்வி அடைகிறேன் தேவன். அந்த வீட்டிலுள்ள மர்மங்களையும் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கான வழிகளையும் தேடுகிறான் தேவன். அதன்பின் என்ன நடக்கிறது? வீட்டிலுள்ள மர்மம் என்ன? தேவன் அங்கிருந்து தப்பித்தானா? இல்லையா? 'பிரம்மயுகம்' படத்தின் கதைச் சுருக்கமாகக் கொள்ளலாம்.

படத்துக்குப் படம் தன்னை புதுப்பித்துக் கொள்ளும் ஆற்றலைக் கொண்டது மம்முட்டி அவரது நடிப்பு. மெகா ஸ்டார் அந்தஸ்தை எல்லாம் தூக்கித் தூரவைத்து விட்டு கதாபாத்திரத்துக்கான அர்ப்பணிப்புடன் கூடிய அவரது நடிப்பாற்றலை எவ்வளவு பாராட்டினாலும் ஈடாகாது. எதிர்மறை நிழலாடும் கதாபாத்திரத்தைச் சிரமமின்றி வெகு இயல்பாகக் கையாளும் அவரது நடிப்பு இப்படத்தில் ஆதிக்கம் செய்திருக்கிறது.

அர்ஜுன் அசோகனின் நடிப்பும் படத்துக்குப் பெருமளவில் பலம் சேர்த்திருக்கிறது என்றே கூறலாம். அச்சம், கையறு நிலை, பக்தி, பசியென என ஒவ்வொரு உணர்வுகளையும் வெளிப்படுத்தும் விதம் இரசிகர்களை ஈர்க்கிறது. அதேபோல், சித்தார்த் பரதன், அமைதியை வெளிப்படுத்தி, சமமான ஈர்க்கக்கூடிய நடிப்பை வெளிப்படுத்துகிறார். இந்த மூவர் தவிர, அமல்டா லிஸ், மணிகண்டன் ஆர். ஆச்சாரி இவர்கள் இருவரும் படத்தில் உள்ளனர். பெரிதாக இவர்களுக்குக் காட்சிகள் இல்லை, என்றாலும் அவர்களது பாத்திரங்களை நிறைவாகச் செய்துள்ளனர்.

இந்தப் படத்தின் சரிபாதி பாராட்டுகள் தொழில்நுட்பக் குழுவுக்குத்தான். படத்தின் ஒளிப்பதிவாளர் ஷெஹ்னத் ஜலாலின் படமெடுப்பு படம் முழுவதும் திகிலின் நிழலாடச் செய்திருக்கிறது. இவரது சிறப்பான லைட்டிங்ஸ் கதாபாத்திரங்களின் உணர்வுப்பூர்வமான வெளிப்பாடுகளைத் துல்லியமாக்கி வெளிப்படுத்தி இருக்கிறது. இசையமைப்பாளர் கிறிஸ்டோ சேவியர் பின்னணி இசையும், எடிட்டர் ஷபீக் முகமது அலி கட்ஸும் காட்சிக்குக் காட்சி விறுவிறுப்பை அதிகரித்துச் செல்கிறது.

பாடல்கள் அனைத்தும் திகிலின் படபடப்பைக் குறைத்து ரசிக்க வைக்கிறது. Sounds அனைத்தும் சிறப்பாகவே உள்ளது. இத்திரைப்படத்தில் ஒரு தனி நபரிடமும் அல்லது ஒரு குழுவிடமோ அதிகாரமும் ஆதிக்கமும் குவிந்து காணப்படுக இருந்தால் அது எந்தளவிற்கு ஆபத்தினை ஏற்படுத்தும் என்பதனை அதிகார குவிப்பு தளமாகச் சாத்தான் மற்றும் ஜாதி என்பவற்றினை இதற்குக் குறியீடுகளாகக் காட்டி முற்படுவது சிறப்பாகச் சிறப்புச் சிறப்பாகக் காணப்பட்டாலும் அதனை இன்னும் அழுத்தமாகக் கூறியிருந்தால் மிகவும் அருமையாக இருந்திருக்கும் என்பது நிதர்சனமாகும்.

இவர்கள் அனைவரது நேர்த்தியான உழைப்பால் 'பிரம்மயுகம்' திரைப்படம் நல்ல அனுபவத்தைக் கொடுக்கிறது. திகிலூட்டும் மர்மங்கள் நிறைந்த நாட்டுப்புறக் கதைகளில் ஆர்வம் கண்டவர்களுக்கு ஏற்ற திரைப்படம் என்றே கூறலாம்.




# அந்த மூன்று நாட்கள்

ரா.மனோஜ்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.







வாழ்வில் முதுமைக்காலம் சிறப்பாக அமைய, இளமைக் காலத்தில் நாம் பெறும் அனுபவங்களும் நினைவுகளும் துணையாக இருக்கும். அந்தவகையில், பல்கலைக்கழக நாட்கள் ஒவ்வொன்றும் புதுவித அனுபவமாக நீங்காத நினைவைக் கொண்ட நாட்களாக அமைவது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழக நாட்களில் நண்பர்களுடன் செல்லும் திடீர் பயணங்கள் எப்போதும் சிறப்பாக அமையும். அந்தவகையில், யாழ். பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் நாங்கள் பேராதனை பல்கலைக்கழகம் சென்று வந்த நாட்கள் நீங்கா நினைவுகளைக் கொண்ட நாட்களாக இருக்கும்.

செப்டெம்பர் மாதம் 6,7 மற்றும் 8ஆம் திகதிகளில் பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்குமான கரப்பந்தாட்ட போட்டியைப் பார்வையிடச் சென்ற நாட்களே அந்த மறக்க முடியாத நாட்கள் ஆகும்.

ஏனைய வீரர்களுக்குச் செல்வதற்குப் பல்கலைக்கழகம் மூலம் பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எங்களையும் அதே பேருந்தில் வருமாறு நண்பர்கள் அழைத்த போதிலும் எங்களுக்கு விரிவுரை இருந்த காரணத்தினால் அவர்களோடு செல்ல முடியவில்லை 6ஆம் திகதி இரவு கண்டி பேருந்தில் நாங்கள் மூவரும் சென்றோம் அதிகாலை 2 மணி அளவில் பேராதனை பல்கலைக்கழகத்தில் அருணாச்சலம் விடுதியின் அருகே பேருந்தில் இருந்து இறங்கி உள்ளே சென்று காலிறுதிப் போட்டி இருந்தது அதனைப் பார்வையிடுவதற்குச் சென்றோம்.

காலிறுதி போட்டியில் வெற்றி பெற்ற பின்னர், பேராதனை பல்கலைக்கழகத்தில் இருக்கும் எங்களது நண்பர்கள் எங்களைச் சந்தித்தார்கள்.

பல்கலைக்கழகத்தினை முழுதாக மூன்று நாட்களில் பார்வையிட முடியாது என்பதைத் தெரிவித்த நண்பர்கள், எங்கங்கே எங்களை அழைத்துச் செல்ல முடியுமோ அங்கெல்லாம் அழைத்துச் சென்று காட்டினார்கள். அங்கிருக்கும் நடைமுறைகள், அங்கிருக்கும் கட்டிடங்கள், அவற்றிற்குப் பின்னால் இருக்கும் வரலாறுகள், அங்குப் பின்பற்ற வேண்டிய நியதிகள் என்பவற்றை காட்டினார்கள்.

அங்கிருந்த மூன்று நாட்களில் ஏராளமான புகைப்படங்கள் நினைவலைகளாக தொலைபேசியில் நிறைந்து கிடக்கின்றன.

காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு எல்லாவற்றையுமே பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையிலேயே பெற்றுக் கொண்டோம் சிற்றுண்டிச்சாலை என இருக்கும் நடைமுறைகள் எங்களை வியக்க வைத்தன.

இரண்டாம் நாள் அரை இறுதிப் போட்டியும் இறுதிப் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஏனைய பல்கலைக்கழக வீரர்களுக்கு மத்தியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி பலமாக இருப்பதால், நிச்சயம் இறுதிப் போட்டியில் வெற்றி அடைவோம் என்று நம்பிக்கையுடன் காலையில் மைதானம் நோக்கிப் புறப்பட்டோம்.

அன்று இறுதி நாள் என்பதால், காலையிலிருந்து பேராதனை பல்கலைக்கழக நண்பர்கள் எங்களுடனேயே இருந்தார்கள். அரை இறுதிப் போட்டி காலையிலேயே நிறைவடைந்தது. மாலை 7 மணிக்கு இறுதிப் போட்டி என்று அறிவிக்கப்பட்டது. ஆகவே, அரை இறுதியில் வென்ற மகிழ்ச்சியுடன் பல்கலைக்கழகத்தில் செல்லாத இடங்களுக்கெல்லாம் சென்று வந்தோம், அங்கு மலிவான விலையில் கிடைக்கும் தின்பண்டங்களை எல்லாம் வாங்கி உண்டோம், பேராதனை பல்கலைக்கழகத்தில் நாங்கள் சென்ற நாட்களில் நெல்லிக்கனிகள் அதிகம் காய்த்துக் கொட்டின.

மிகவும் வசதியான விடுதி அங்கு காணப்பட்டதே சற்று ஏக்கமாகவே பார்த்தோம். எங்களுக்கு முதலாம் வருடமும் இறுதி வருடமும் மட்டுமே விடுதி கிடைக்கப்பெறும். ஆனால், அங்கிருக்கும் மாணவர்களுக்கு முதலாம் மூன்றாம் மற்றும் இறுதியாண்டு விடுதியிலேயே இருக்கலாம்.

இவ்வாறு எல்லா இடங்களும் சுற்றிய பின்னர், மதியம் உணவினையும் உட்கொண்ட பின்னர், மாலை 6 மணியளவில் மீண்டும் பேராதனை பல்கலைக்கழக விளையாட்டரங்கிற்குப் பிரவேசித்தோம்.

கடந்த வருடம் அரையிறுதிப் போட்டியிலேயே வெளியேறிய வாய்ப்படல்களை இந்த முறை பல்வேறு வளர்ச்சி கட்டங்களைத் தாண்டி இறுதிப் போட்டி வரை முன்னேறி இருக்கின்றது. தேசிய அளவிலான பயிற்சியாளர்களைக் கொண்டகளனி அணி மறுபுறம் கடுமையாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

முழு அரங்கமுமே ரசிகர்களால் சூழப்பட்டிருந்தது ஒருபுறம் களனி பல்கலைக்கழகம் மாணவர்களும் மறுபுறம் நாள் பல்கலைக்கழகம் மாணவர்களும் வேறு வேறு பல்கலைக்கழகங்களில் இருந்து வந்திருந்த மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு ரசிகர்களாக மாறியது எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இறுதிப் போட்டி மிகவும் கடுமையாக இருந்தாலும், இறுதி கணத்தில் வெற்றி களனி பல்கலைக்கழகத்திற்கு என்று முடிவானது.

கடுமையாகபோராடியும் எங்களது வீரர்களால் வெற்றியை பெற்றுக் கொள்ளமுடியவில்லை இருந்தாலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முறையாக இறுதிப் போட்டிக்குச் சென்ற அணி என்றுமேலும் பல வரலாற்று சாதனைகளோடு எங்களது பல்கலைக்கழகம் பெருமையாகவே அங்குத் திகழ்ந்தது.

போட்டி முடிந்தவுடன், கீழே சென்று தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அழுத நண்பர்களைத் தேற்றியது இன்னும் மனதிற்குள் காட்சிகளாக ஓடிக் கொண்டிருக்கின்றன.

பிறகு பரிசளிப்பு விழா முடிந்தவுடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் மூன்று நாட்களும் எங்களோடே இருந்த நண்பர்கள் பிரிந்து செல்ல மனம் இடம் கொடுக்காவிட்டாலும், நாங்கள் அனைவரும் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அவர்களை அன்போடு அழைத்து விடை கொடுத்தோம்.


பிறகு இரவு 9 மணியளவில் விடுதியில் சென்று எங்களது பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வீரர்கள் சென்ற அதே பேருந்தில் நாங்களும் ஏறினோம். இடையில் இரவு உணவினை முடித்துக் கொண்ட நாங்கள், நேரடியாகப் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ளே வந்து, விடுதியில் இருக்கும் மாணவர்களினை விடுதியில் விட்டு விட்டு எங்களது அறைக்கு வந்தோம். அதிகாலை 4 மணி ஆகிவிட்டது.


வாழ்க்கையில் எத்தனையோ பயணங்கள் சென்றிருந்தாலும், கரப்பந்தாட்ட போட்டியினை காணும் நோக்கில் பேராதனை பல்கலைக்கழகம் சென்று முழு பேராதனை பல்கலைக்கழகத்தையும் சுற்றிய அலைந்த அந்த மூன்று நாட்கள் வாழ்க்கையில் என்றுமே வண்ணமயமான நாட்களாகவே அமையும். அதன் பிறகு ஒவ்வொரு தடவையும் அந்த வீதியில் செல்லும் போதெல்லாம் அங்குத் தங்கியிருந்த அந்த மூன்று நாட்களே நினைவுக்கு வருகின்றன.

வாழ்க்கையில் பல்வேறு பசுமையான நினைவுகளை மூட்டை கட்டிவைப்போம். எதிர்காலத்தில் நினைத்துப் பார்ப்பதற்காக நிச்சயமாக வாழ்க்கையில் பசுமையான பக்கங்களில் என்றுமே பேராதனை பல்கலைக்கழகத்திற்குச் சென்ற நாட்கள் நீங்கா இடம்பெற்றிருக்கும், அதற்கு அங்கு நாங்கள் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் என்றுமே எங்களது சமூக வலைத்தளங்களில் சாட்சியாகக் காட்சியளிக்கும்.



# பர்மா பாதையில் சர்மாவின் நடை பயணம்







சந்திரகுமார் யதுஷினி,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



வெ.சாமிநாத சர்மா இந்தியாவில் திருவெண்ணாமலையில் உள்ள வெங்களத்தூரில் பிறந்தவர். எழுத்தாளர், இதழாளர், பதிப்பாசிரியர் தமிழறிஞர், பன்மொழிப் புலமையாளர், மொழி பெயர்ப்பாளர். எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். அறிவியல் தமிழின் முன்னோடிகளில் ஒருவர் என அநேக புகழ்பெற்றவர்.

இரண்டாம் உலகப்போர் தீவிரமடைந்து, 1941இன் பிற்பகுதியில் ஜப்பானியப் படைகள் பர்மாவை (மியன்மார்) நெருங்கிக் கொண்டிருந்தன. அந்த காலகட்டத்தில் ரங்கூனில் இருந்து வெளியாகிக்கொண்டிருந்த 'ஜோதி' எனும் பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராக இருந்தார் சாமிநாத சர்மா. 1941 டிசெம்பர் மாதக் கடைசியில் ஜப்பானிய விமானங்கள் ரங்கூன் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கிய போது, இனியும் பத்திரிகையை நடத்துவதோ, வெளியிடுவதோ சாத்தியமில்லை என்கிற கட்டத்தில் தன்னுடைய நூல்கள், குறிப்புகள், உடைமைகள் என தனக்குப் பிரியமான அத்தனையையும்

அங்கேயே விட்டுவிட்டு வெகு சில பொருட்களுடன் பெப்ரவரி 12, 1942இல் ரங்கூனை விட்டு வெளியேறுகிறார்.

இதன்போது தன்னுடைய அனுபவங்களை, உணர்வுகளைக் குறிப்பெடுத்து வைத்து பின்னாளில் அமுதசுரபியில் எழுதிய தொடரின் தொகுப்புதான் எனது 'பர்மா வழி நடைப் பயணம்'.

இந்தவகையில், தன் நாட்குறிப்புகளின் அடிப்படையில் எழுதிய நூலாக இது அமைந்திருப்பதோடு, சாமிநாத சர்மாவிற்குப் பர்மாவிலிருந்து (மியன்மார்) நடையாகப் புறப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டதிலிருந்து தன் சொந்த நாடான இந்தியாவின் சென்னையை வந்து சேரும் வரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்ட அனுபவங்கள் என்பவற்றை வாசகர்களுக்கு இந்நூல் அறிமுகப்படுத்துகிறது.

"பர்மாவில் இருந்து எப்படியும் வெளியேறத்தான் வேண்டுமென்ற நிர்ப்பந்த நிலைமை உருவானதிலிருந்து 1942 வருஷம் மே மாதம் பதின்மூன்றாந் தேதி சென்னை போந்த வரையில் நான் இடைவிடாமல் நாட்குறிப்பு எழுதிக் கொண்டு வந்தேன் அந்த நாட்குறிப்பே இந்நூலுக்கு அடிப்படை. இதுதவிர, இந்நூலில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கோ.ரா.ரா என்பவரும், வி.வே.ரா என்பவரும் இந்த நடைபயணத்தை பற்றி சில குறிப்புகள் எழுதி வைத்திருந்தார்கள் என் வேண்டுகோளுக்கினங்க அக்குறிப்புகளை எனக்கு கொடுத்து உதவினார்கள்.

என்னுடைய நாட்குறிப்போடு அக்குறிப்புகளை ஓடவிட்டுச் சரிபார்த்துக் கொண்டேன்" என்று இந்தநூல் உருவான பின்னணி குறித்து சாமிநாத சர்மா குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலானது ஜப்பானியர் தந்த கிறிஸ்மஸ் பரிசு, அடுத்தடுத்து விமானத் தாக்குதல், விதியின் வழியில், நன்றிக்குரிய நண்பர்கள், பரிவு காட்டிய உறவினர்கள் என 47 பகுதிகளைக் கொண்டு அமையப் பெற்றுள்ளது.

இந்தப் பயணம் அவர் விரும்பிய ஒன்றல்ல. நெருக்கடிகளுக்கு மத்தியில் உயிர் பிழைக்கும் பொருட்டு தன் உடைமைகளை எல்லாம் கைவிட்டுச் செல்லும் துயர மனோநிலையுடன் ஆரம்பிக்கிறது.

இந்தியாவிற்குப் போக வேண்டும் என்பது மட்டும்தான் இலக்கு. ஆனால், எப்படிப் போவது என யாருக்கும் தெரியாது.

பயண வசதி இல்லாத காலம் என்பதால் இந்தியாவை நோக்கி நடக்கத் தொடங்கியவர்கள் தான் அதிகம். நல்ல வேளையாக சாமிநாத சர்மா மற்றவர்களை விடக் குறைவான தூரமே நடக்கிறார். டோலி, புகைவண்டி, கப்பல் என மாற்றி மாற்றிப் பயணிக்கிறார். வரும் வழியில் உள்ள அகதி முகாம்களில் தங்குகிறார்.

ரங்கூனில் இருந்து கல்கத்தா வந்தடைவது ஒரு கட்டம். கல்கத்தாவில் இருந்து சென்னைக்குச் செல்வது அடுத்த கட்டம் என விரிகிறது இந்த நூல். இந்த பயணத்தில் அவர் மட்டுமில்லை. நம்மையும் கூடவே அழைத்துச் செல்வதைப் போலொரு உணர்வு மேலிடுகிறது.

மியன்மார் நாட்டின் அழகான இயற்கை, அங்குள்ள வணிகர்கள், சிற்றூர்களின் தனித்துவங்கள், பௌத்த மதத்தின் ஆழமான தாக்கங்கள் என்பவற்றை இவரது எழுத்து வாசகர்களுக்கு நேரில் காண்பிக்கிறது. ஒவ்வொன்றையும் நமக்குக் காட்டுகிறார்.

விபரிக்கிறார். விவாதிக்கிறார். கேள்விகளை நமக்குள் எழுப்புகிறார். ஓரிடத்திற்குப் பிறகு நாமும் அவர் கூடவே நடக்கிறோம், மலைகளில் ஏறுகிறோம். அகதி முகாம்களில் அவலங்களைக் கண்டு பொருமுகிறோம்.

அடுத்த கணத்தில் என்ன நடக்கும் எனத் தெரியாத பயணத்தில் உண்டான உடல் சோர்வு, மனச்சோர்வு காரணமாக நம்பிக்கையிழந்த சமயங்களில் மனதை இறை வழிபாட்டிலும், இயற்கையை ரசித்துக் கொண்டும், பல நாட்கள் உணவே இல்லாமல் பயணப்பட்டாலும் முகமறியா மனிதர்கள் வழியெங்கும் செய்த உதவிகள், பயணத்தைத் தொடர முடியாத அளவுக்கு உடல் நலிவுற்றவர்கள், மரணித்தவர்கள், அத்தனையும் தாண்டி தாய் மண்ணில் கால் வைத்தவுடன் எழுந்த உணர்வுகள் என நூலின் நெடுகே பல இடங்களில் நம்மை நெகிழ வைக்கிறார்.

நூற்றுக் கணக்கான மைல்கள் நடந்து வரும் மக்கள் பரிதாபமாக உயிருக்கே உணவில்லாமல் செத்து விழுகிறார்கள். ஒரு எளிய குடும்பம் பண்ட பாத்திரங்கள், குழந்தைகள், மற்றும் கைக்குழந்தையோடு நடந்து வருகிறது.

உணவில்லாமல் நோயில் கைக்குழந்தை இறந்துவிடுகிறது. இறந்த குழந்தையை அங்கேயே விட்டுவிட்டு மற்ற குழந்தையை அழைத்துக்கொண்டு நடந்து வருவதைச் சொல்கிறார். ஒரு கணம் காட்சி மனதில் படிகிறது.

வாழ்க்கையில் எத்தனையோ பொருட்களைச் சேர்த்து வைக்கிறோம். நம் வீட்டை விட்டு ஒரு அவசர நெருக்கடியில் போக வேண்டியிருந்தால், எவற்றை எடுத்து வர இயலவில்லை என்று வருந்துவோம்? சாமிநாத சர்மா எவற்றுக்காக வருத்தப்பட்டார்? விலை கொடுத்து வாங்கிய புத்தகங்கள், நண்பர்கள் அன்பளிப்பாகக் கொடுத்த புத்தகங்கள், நூல்களாக வெளிவருவதற்குத் தயார்ப்படுத்தி வைத்திருந்த கையெழுத்துப்பிரதிகள், பல இடங்களில் நிகழ்த்தி வந்த சொற்பொழிவுகளின் குறிப்புக்கள், நூல்களைப் படித்து வரும்போது எடுத்துக்கொண்டு வந்த குறிப்புக்களடங்கிய புத்தகங்களை எடுத்து வர இயலவில்லை என்று மிகவும் வருந்துகின்ற இடங்களில் புத்தக வாசிப்பை விட்டு விலகிப்போன நம்மிடம் எடுத்துச் செல்ல எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன என்ற கேள்வி மனதில் எழாமலும் இல்லை.

பயணத்தின் போது, சந்தித்த எல்லா மனிதர்களையும் முழு பெயர் கொடுக்காமல் குறிப்பாக, நண்பர்கள் "நா மற்றும் " ரா உதவியால், அகதி முகாமுக்குப் போகாமல், டாமுவின் தபால் நிலையத்திற்குப் போகிறார்கள்.

அங்குச் சென்ற பிறகு திரும்பவும் அதிர்ஷ்ட தேவதையால், அதன் போஸ்ட் மாஸ்டர், "கி, ரங்கூனில் மிகவும் பரிச்சயமான நண்பராக அமைகிறார். என அவர்களது பெயர்களில் முதல் ஒன்று இரண்டு எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தியுள்ள விதம் தனிப்பட்டவர்களின் உரிமையைப் பாதுகாப்பதாக அமைந்துள்ளது.

மற்றும் தெளிவாகவும் எளிமையாகவும் மொழி அமைந்து வாசகர்களை கதை நாயகரின் அனுபவங்களில் ஒன்றிக்க வைக்கிறது.

பல்வேறு காரணங்களினால் தாய் மண்ணை விட்டு விலகி வெளிநாடுகளில் தங்கி இருப்பவர்களின் மனநிலை, வாழ்வியல் நிதர்சனங்கள், என பல்வகைப்பட்டோருக்கும் இந்த நூல் நெருக்கமாக இருப்பது போலவே தோன்றுகிறது.

பயணக் கட்டுரைகள் என்பவை பெரும்பாலும் சுயசரிதையைப் போலவே எழுதப்பட்டிருக்கும். வெகு சிலரே அதைத் தாண்டிய, வெளியில் பயணங்களை அது தரும் அனுபவங்களை, தரிசனங்களை அணுகி எழுதுகின்றனர்.

அத்தகைய நூல்களே காலங்கடந்தும் பேசப்படுகின்றன. பிற்காலத்தில் அவை வரலாற்றுக் குறிப்புகளாகவும் அறியப்படுகின்றன. அந்தத் தரத்திலானது இந்த நூல்.

சர்வதேச பயணத்தைப் பற்றி எழுதும்போது, வாசிக்கும்போது வாசகர்களுக்குக் குறிப்பிட்ட இடங்களின் உள்ளூர் அரசியல், சமூகத் தேவைகள், மக்களின் வாழ்க்கை பற்றிப் புரிந்து கொள்வது தடையாக இருக்கலாம். இந்த நூலை வாசிப்பதும் அப்படியொரு அனுபவத்தை உண்டாக்கலாம். ஆனால் பயணக்கதை வாசிக்க விரும்பும் அனைவருக்கும் ஓர் அற்புதமான அனுபவமாக அமையும்.

# புதிய பயணம்

றோசில்டா
அன்டன்





கட்டுநாயக்கா விமான நிலையம் அன்று பரபரப்பாக இயங்குவதாக எனக்குள் நினைத்துக் கொண்டேன்.ஆனால், நித்தமும் பரபரப்புக்குப் பஞ்சமே இல்லை என்பது நானறிவேன்.

இருந்தும் என் அப்பா, அம்மா, சகோதரர்களை விட்டுப் பிரிவதின் வலி தான் விமான நிலையத்தின் பரபரப்போ. குடும்பத்தாரின் அழுகை கண்ணீருடனும் கவலை தோய்ந்த முகத்துடனும் இலங்கையிலிருந்து விடைபெற்றேன்.

அதிகாலை இரண்டு ஐம்பத்தைந்து மணிக்கு இத்தாலி நாட்டுக்கான எனது பயணம் ஆரம்பமானது. மறு நாள் முற்பகல் இத்தாலி நேரம் பன்னிரெண்டு மணிக்கு வந்தடைந்தேன். விமான நிலையத்தில் எனது கணவரின் வருகை மகிழ்ச்சியைத் தந்தது. கட்டியணைத்து முத்தமிட்டவர்.

பூ பொக்கை தந்து வரவேற்றார். காரில் ஏறி அமர்ந்த நான், சாளரத்தின் வழியே இத்தாலி நகரின் அழகை ரசித்துக் கொண்டு வந்தேன். "என்னம்மா... யோசனை..." கணவரின் அன்பான விசாரிப்பு கண்கலங்க வைத்தது. வீட்டிற்குள் முதன்முதலாகக் காலடி எடுத்து வைத்தபோது, இனம்புரியாத மகிழ்ச்சி.

பத்து வருட காலம் கணவரைப் பிரிந்து வாழ்ந்த எனக்கு வீசா சரி வந்ததுமே கணவரின் நாட்டிற்கு வந்து விட்டேன். குளித்து முடித்து விட்டு மதிய நேர உணவிற்கு பின் என்னிடம் கணவர் "றொசி நாம் கோயிலுக்குப் போய் வருவோமா...? "சரி போவோம்..." நான் உடனே மகிழ்ச்சியுடன் ஆயத்தமானேன். புனித நாடு இத்தாலியில் என் வாழ்க்கை தொடங்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

சிசிலி தீவின் கர்த்தானியா நகரின் மிக பிரபல்யமான புனித செபஸ்தியார் ஆலயம் சென்று மெழுகுதிரி பற்ற வைத்து பிரார்த்தனை செய்து விட்டு திரும்பினோம்.

எனக்கு வெளி இடங்கள் சுற்றிப் பார்ப்பதில் அலாதி பிரியம் என்பதைக் கணவர் அறிவார். அன்று கர்த்தானியா நகரின் அழகைக் கணவர் காரில் சுற்றிக் காட்டினார். "கொஞ்ச நேரம் ஓய்வெடுத்து மீண்டும் பயணத்தைத் தொடருவோம் றொசி" என்று கணவர் சொன்னதுமே காரை விட்டு இறங்கித் துள்ளி எழுந்து சிறுவர் பூங்காவிற்குள் சென்றேன்.

அழகான வரவேற்பு ஓவியங்கள். ரோமியோ ஜூலியட் காதலர்களின் கண்கொள்ளா உருவச் சிற்பங்கள். கர்த்தானியாவின் அழகை மெருகேற்றியது. கணவர் வேலைக்குச் சென்றால் தனிமை அதிகம் என்பதால் "நான் இத்தாலி மொழி கற்க வேண்டும்" என்றதுமே கணவர் இத்தாலி ஆரம்ப பாடசாலை ஒன்றில் என்னைச் சேர்த்து விட்டார்.

நாங்கள் வசிக்கும் நகரின் பாதைகளையும், சில இத்தாலி மொழி வார்த்தைகளையும் சொல்லித் தந்திருந்தார். எனது அன்பு கணவர். பாடசாலைக்குச் சென்று வருவதால் இத்தாலி மொழியிலும் தேர்ச்சி பெற்றேன். கணவரின் ஒத்துழைப்பு எனக்கு வரப்பிரசாதமே! நான் வெளியே சென்று வரும் போது, சிறுவர் பூங்காவில் அறிமுகமான லீசாவுடன் என் பொழுது கழிந்தது.

அன்றோர் மாலைப் பொழுதில் "லீசா எப்படி சுகம்..." ஜகொமேஸ் தாயிஸ "நான் நலம் நீங்க நலமா..."

"ஓம் நான் நலம் லீசா..." "என்ன யோசனை லீசா..." என்று நான் கேட்டதுமே, "இல்லை ஜோன் என்னை விரும்புகின்றான் என்னால் உடனே என் வாழ்வில் முடிவு எடுக்க முடியாதுள்ளது." என்றாள்.

இருபத்தி ஆறு வயது அவளுக்கு மகளின் வயது எட்டு. அறியாத பருவத்தில் அவளின் கருவில் மகளாக உதித்தவள் தான் ஹாயா. கணவர் இல்லை. காதலனாக இருந்தவனுக்குக் கணவனாக லீசாவுடன் வாழ விரும்பவில்லை. வயிற்றில் பிள்ளையுடன் தவிக்க விட்டுச் சென்று விட்டான் பாதகன்.

எட்டு வருடங்களின் பின் அவளது வாழ்வில் மீண்டும் ஒரு காதல் ஜோன் வடிவில். மகள் ஹாயாவின் எதிர்காலத்தை எண்ணியவளால் தன் வாழ்வில் சரியான முடிவினை எடுக்கத் தடுமாறினாள். ஜோன் அழகான வாலிபன் பொலிஸ் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றான். நல்ல பண்பாளன்.

எனது கணவரின் நல்ல நண்பரும் கூட. "எனது கணவரைக் கதைக்கச் சொல்லவா மகள் ஹாயா பற்றி ஜோன் அறிந்தவர் தானே அவரிடம் இது சம்பந்தமாக நீயே நேரடியாகக் கதைக்கலாமே"

"ஆம் இன்று இது விடயமாகச் சரியான தீர்வினை நான் ஜோனிடம் கதைக்கின்றேன்..." என்றாள் லீசா. இந்த நாட்டில் இவர்களின் கலாசாரம், பண்பாடு அத்தனையும் மாறுபட்டதே. விரும்பியவருடன் ஒரே வீட்டில் திருமணம் முடிக்காமலே வாழலாம்.

பிடித்தால் திருமணம் செய்வார்கள். இல்லை என்றால் பிரிந்து விடுவார்கள். சுதந்திரமாய் வாழ விரும்புவார்கள். மோனலிசா போன்ற அழகிகள் வலம் வரும் நாடு.

பெண்களை மதிப்பார்கள். எனது நகரான கர்த்தானியா கடலால் சூழப்பட்டு, மலைகள் கம்பீரமாய் வீற்றிருக்கும் அமைதியான தீவு.

பல நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட நாடு. மனிதர்கள் அனைவரும் இன இமத பாகுபாடு இன்றி மகிழ்ச்சியாக வாழ்வதைக் காணும் போது இரட்டிப்பு மகிழ்ச்சி.

"றொசி... இன்று என்ன சமையல்" கணவர் கேட்ட கேள்விக்கு "இன்டைக்க புட்டும் பருப்புக்கறியும்" என்னிடமிருந்து வந்த பதிலால் அன்டனி ஆனந்தப்பட்டார்.

எம் நாட்டு உணவு என்றாலே அலாதிப் பிரியம். அவருடைய நண்பன் கண்ணன் தனது மனைவி பிரசாந்தியுடன் வீட்டிற்கு வருகை தந்தார். "வாங்க... வாங்க கண்ணன் எப்படி சுகம் இன்று எங்கட நாட்டு சாப்பாடு தான் உங்களுக்கும் பிட்டு என்றால் விருப்பம் என்று அன்டனி சொன்னவர்" "ஓம் றொசி அக்கா பதினான்கு வருடம் நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து சொந்த நாட்டிற்குப் போக முடியாதளவில் குடும்ப சுமை வேலை இவேலை இதில எங்க அக்கா வாயிற்கு ருசியாக சமைத்து சாப்பிடுவது இப்ப தான் மகாலட்சுமி பொண்டாட்டி வந்திருக்காள் இனி ஆசைப்பட்டதைச் சமைத்துத் தருவாள்"

கண்ணன் கூறி முடித்ததும் "கை கழுவிட்டு வாடா சாப்பிடுவம்..." என்று நண்பனையும், அவர் மனைவியையும் அழைத்தார். சாப்பிட்டு முடிந்தபின் எமது வீட்டின் மொட்டை மாடியில் அமர்ந்து கதைத்துக்கொண்டிருந்தோம். இந்த நாட்டில் இரவில் உறக்கம் என்பது குறைவே!

மணித்தியால வேலை. சம்பளம் வேலைக்கு ஏற்றாற் போல மனநிறைவாகக் கொடுப்பார்கள். வீதியோரங்களில் இளைப்பாற இருக்கைகள் இருக்கும்.

எப்போதும் மகிழ்ச்சிக்கே முதலிடம். ஆரோக்கிய வாழ்வில் அவதானம் இந்த மக்கள். பெல்கணயில் அமர்ந்திருந்த எனக்கு அங்கு நான் கண்ட காட்சி அமைதியான கடல், உயர வளர்ந்திருந்த கிறிஸ்மஸ் மரங்கள்இஅதைச்சுற்றி கொடிச் செடிகளில் பூக்கள் பூத்திருந்தன. அழகான மலைப் பிரதேசங்களில் அடுக்கு மாடி வீடுகள், மின் குமிழால் அலங்காரங்கள், பதினைந்து நிமிடத்திற்கொரு தடவை சுற்றி வர உள்ள கோயில்களின் மணியோசைகள், வீதியில் சத்தமின்றி வாகனங்கள் நகரும் அழகு இப்பாதையில் நடக்கும் மனிதர்கள் மறு பக்கம் வீதியைக் கடக்கும் வரை வாகனங்களை இயக்குவோரின் பொறுமை, இந்த நாட்டினருக்குரிய பண்புகளில் ஒன்றே. இவற்றை எல்லாம் அனு அனுவாக ரசித்த நான் கணவரிடம்" அப்பா இந்த நாட்டில் நான் கண்ட மனிதர்கள் சூழல், பண்பாடு, கலாசாரங்களை பற்றி பத்திரிகைக்கு எழுதவா"

"தாராளமாய் எழுதுங்க..." என்றதும் என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஐரோப்பாவில் ஆங்கிலம் தேவையற்ற ஒன்றே. தாய் மொழியிற்கு அவர்கள் கொடுக்கும் மரியாதை தனி எனலாம். ஒவ்வொரு கட்டிடங்களில் ஓவியங்களைக் காணலாம். கலைநயத்துடன் இந்நாட்டின் பாரம்பரியத்தைப் பறைசாற்றுவதாய் இருக்கும். எனது முயற்சிகளுக்குக் கணவர் துணையாக இருந்தார்.

அன்று வீட்டு வேலைகளை முடித்த நான் மொட்டை மாடியில் நகரின் அழகை ரசித்தவளாய் என்னையே மறந்து விட்டேன்.

"என்ன றொசி யோசனை" கணவர் கேட்டதும் சுய நினைவுக்கு வந்தவளாய் "ஒன்றுமில்லை இந்த நாட்டில் ஒவ்வொரு மனிதர்களிடத்திலும் காணும் பண்புகள், அவர்களின் நாகரீகங்கள் பற்றிய சிந்தித்துப் பார்த்தேன். சுதந்திரம் என்கின்ற பெயரில் அத்துமீறிய பழகும் பழக்கவழக்கங்களும் இங்கே இருக்கின்றது, அதே வேளையில் மற்றவர்களை மதித்து வாழும் பண்புகளும் இருக்கின்றது. லீசாவின் வாழ்வைப் போல, பலரின் வாழ்வு இங்கே இப்படி தான் ஆனால் இந்த வாழ்க்கையைக் கூட இவ்வுலகில் வாழும் வரை மகிழ்வுடனே வாழ்கின்றனர்" என்று எனது மனதில் உள்ளதைக் கூறினேன்.

சிறிது சிறிதாக எட்டு மணியளவில் இருட்டத் தொடங்கி விட்டது. இரவு காற்று பலமாக வீசத்தொடங்கியிருந்தது. புழுதிக் காற்று வேறு . ஐரோப்பா கண்டத்தின் உயிர்ப்புடன் இருக்கும் எட்னா எரிமலையின் தாக்கம். எங்கும் கரும் புகை மண்டலம்.

எட்னா எரிமலை நான் வாழும் கர்த்தானியா நகரை மட்டுமல்ல முழு சிசிலி தீவையும் ஆட்கொள்ளும் அரக்கன். சில வாரங்களுக்கு வெளியே செல்லவே முடியாதளவில் ரொம்பவே பாதிப்படையச் செய்வதே வழக்கம். அன்று எட்னாவின் தீப்பிழம்பால் சுற்றுப்புறம் வாழும் மக்களைப் பாதுகாப்பான இடங்களில் அரசாங்க அதிகாரிகள், படையினர் தங்க வைத்தார்கள். ஒரு வாரம் வீட்டிற்குள்ளே எம் வாழ்க்கை.

வெளியில் சென்று வர முடியாதளவில் வெப்பம். சிறிது நாட்களின் பின் நான் சுப்பர் மார்கட்டில் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கச் சென்ற போது, அங்கே லீசா வந்திருந்தாள். "வணக்கம் லீசா எப்படி சுகம்" நான் நலம் நல்ல செய்தி ஒன்று ஜோன் திருமணம் செய்யச் சம்மதம் சொல்லிட்டார் வரும் புதன் கிழமை கலியாணம் கட்டாயம் நீயும் உன் கணவரும் வரவேண்டும். விபரமாக உன் வீட்டிற்கு வந்து அழைப்பு தாரேன்." என்றாள். புதன் கிழமையும் வந்தது லீசா வெள்ளை ஆடையில் சொர்கத்தின் தேவதை போல, காட்சியளித்தாள். மகள் ஹாயா அவள் கரம் பற்றி ஆலயத்திற்கு அழைத்து வந்த போது என் கண்கள் கலங்கி விட்டது.

ஜோன் காரில் இருந்து இறங்கினான். அவனின் அப்பா ஆலயத்திற்குள் அழைத்து வந்தார். திருமணமும் இனிதே நிறைவேறியது.

எல்லோரும் அவர்களை அரிசி தூவி ஆசீர்வாதம் செய்தார்கள். ஜோன் ஹாயாவை அள்ளி அனைத்து தூக்கி நெற்றியில் முத்தமிட்ட போது என் மனதில் இனம் புரியாத ஆனந்தம். ஹாயாவின் அப்பா ஜோனாக கிடைத்த வரம்.

# பிரேசிலில் எக்ஸ் மீதான தடை நீக்கம்



பிரேசில் நாட்டில் எக்ஸ் தளம் மீது விதிக்கப்பட்ட புதிய தணிக்கை உத்தரவுகளால், அங்குள்ள எக்ஸ் அலுவலகத்தை மூடி ஊழியர்களை அதிரடியாக நீக்கினார் எலான் மஸ்க்.

முன்னதாக ஜனாதிபதித் தேர்தலின்போது, முடக்கப்பட்ட எக்ஸ் தளங்கள் சட்டவிரோதமாக மீண்டும் செயல்பாட்டுக்கு வந்ததாகவும் எக்ஸ் தளம் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக அந்நாட்டில் நடந்த உச்சநீதிமன்ற விசாரணையில் பிரேசிலில் எக்ஸ் தளத்திற்கான பிரதிநிதியை நியமிக்க உத்தரவிடப்பட்டது. ஆனால், இதற்கு எலான் மஸ்க் மறுப்பு தெரிவித்ததால் பிரேசிலில் எக்ஸ் தளம் மொத்தமாக தடை செய்யப்பட்டது.

மேலும் இந்த தடையை நீக்க வேண்டுமானால், 5.2 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் செலுத்த வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்நிலையில், அந்த அபாரதத் தொகையை தவறான வங்கிக்கணக்குக்கு எலான் மஸ்க் செலுத்தியதால் விவகாரம் இன்னும் சிக்கலானது.

தவறாக அனுப்பப்பட்ட தொகையை மீண்டும் எலான் மஸ்க்குக்கே அனுப்பி வைக்கும்படி பிரேசில் உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இந்த வழக்கை விசாரித்து வந்த உச்சநீதிமன்ற நீதிபதி அலெக்ஸாண்ட்ரே டி மோரஸ், எக்ஸ் தளம் பிரேசிலில் மீண்டும் செயல்படத் தேவையான அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அடுத்த 24 மணி நேரத்துக்குள் எக்ஸ் சேவைகளை பிரேசில் மீட்டெடுக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

## கழிவறை சென்றால் மதிப்பெண் கிடையாது

அமெரிக்கா கலிபோர்னியாவில் உள்ள பாடசாலையொன்றில் கழிவறை செல்ல இடைவேளை எடுத்துக்கொள்ளாமல் இருந்தால் போனஸ் மதிப்பெண்கள் வழங்கப்படும் என கணித ஆசிரியை மாணவர்களுக்கு ஊக்குவித்த சம்பவம் கண்டனத்தைக் குவித்து வருகிறது.

கலிபோர்னியாவிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் கல்வி குறித்த அங்கு பயின்று வந்த சிறுமியின் தாய் சமூக வளைத்ததில் பதிவிட்டதை அடுத்து இந்த விவகாரம் தெரியவந்துள்ளது,

மேலும், அப்பெண் தெரிவித்துள்ளதாவது, சிறுவர்கள் மதிப்பெண்களே முக்கியம் என்று மூளைச்சலவை செய்யப்பட்டதால் அந்தமதிப்பெண்களுக்காக அவர்கள் தங்களின் இயற்கை உபாதையையும் அடக்கிக்கொள்ளும் அவலம் நிகழ்ந்துள்ளது.

“எனது மகளின் கணக்கு ஆசிரியை ஒரு வினோதமான டாய்லட் பாலிசி வைத்திருக்கிறார். அதன்படி, வாரத்துக்கு ஒரு நாள் மட்டுமே குழந்தைகளைக் கழிவறை போக அவர் அனுமதிக்கிறார், அதன்படி கழிவறை போகாமல் வகுப்பறையிலேயே இருந்து பாடத்தைக் கவனிக்கும் குழந்தைகளுக்கு அவர்அகாடெமிக் பாயிண்ட்ஸ் எனப்படும் குழந்தைகள் படிக்கும் தரத்தை நிர்ணயிக்கும் மதிப்பெண்களை போனசாக வழங்குகிறார்’ என்று தனது சமூக வலைத்தள பதிவில் சிறுமியின் தாய் குறிப்பிட்டுள்ளார்.



## கொம்புடன் கூடிய மண்டை ஓடு ஏலம்

நாகா இனத்தைச் சேர்ந்த 19ஆம் நூற்றாண்டு மனிதர் ஒருவரின் கொம்புடன் கூடிய மண்டை ஓடு பிரிட்டனில் புதன்கிழமை (09) ஏலம் விடப்பட்டது.

இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என நாகாலாந்து முதல்வர் நெய்பியு ரியோ [Neiphiu Rio] மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இறந்தவரின் உடல் மீதிகள் நாகா இனத்தவருக்கே சொந்தம் என்றும் இது தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒருவரின் மண்டை ஓட்டை ஏலம் விடும் இந்த மனிதத்தன்மை அற்ற செயல் மன ரீதியாக நாகா இனத்தவரின் நம்பிக்கையைப் புண்படுத்துவதாக உள்ளது என்று நாகாலாந்து முதல்வர் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தின்போது நாகா இனத்தவர் சந்தித்த கொடுமைகளை இந்த ஏலம் பிரதி செய்வதாக அவர் தெரிவித்துள்ளார். ஏலத்தில் வரும் இந்த மண்டை ஓடானது பிரிட்டன் நாணயம் மதிப்பில் 3,500 முதல் 4,000 பவுண்டுகள் [சுமார் 4 இலட்சம் ரூபாய்] வரை மதிப்புடையது என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏலம் தொடர்பாக நாகா மக்கள் நல்லிணக்க அமைப்பான [FNR] தெரியப்படுத்தியதை அடுத்து நாகாலாந்து முதல்வர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார். வடகிழக்கு மாநிலமான நாகாலாந்தில் மாநில கட்சியான NDPP ஆட்சியில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா

## போராட்டம் நடத்த தடையில்லை

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அருகே சுங்குவார்சத்திரம் சிப்காட்டில் அமைந்துள்ள ‘சாம்சங்’ நிறுவன தொழிலாளர்கள் 1,200 பேர் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கம் அமைப்பது உள்பட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் 9-ந் திகதி முதல் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும், போராட்டத் திடல்பந்தல் அகற்றப்பட்ட நிலையிலும் அதே இடத்தில் அமர்ந்து கொட்டும் மழையிலும் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு அனைத்து ஊழியர்களையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 5-க்கும் மேற்பட்ட தனியார் பேருந்துகளில் அருகில் உள்ள



திருமண மண்டபத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். பின்னர் சொந்த பிணையில் தொழிலாளர்களை பொலிஸார் உடனடியாக விடுவித்தனர்.

இதனிடையே இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு: சி.ஐ.டி.யு.க்கும் அரசுக்கும் எந்த விரோதமும் இல்லை. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர அரசு தயாராக உள்ளது” என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சாம்சங் தொழிலாளர்கள் அமைதியான முறையில் போராட்டம் நடத்த தடையில்லை என்று சென்னை ஐகோர்ட்டு தெரிவித்துள்ளது.





சகலதுறைவீரர்களின் தரவரிசையில்

# மூன்றாமிடத்துக்கு முன்னேறிய பாண்டியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு இந்தியாவின் ஹர்திக் பாண்டியா முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷுக் கெதிரான முதலாவது போட்டியில் 39 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய நிலையிலேயே ஏழாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை பாண்டியா அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களுக்கான தரவரிசை பின்வருமாறு,

1.லியம் லிவிங்ஸ்டோன், 2.டிபேந்திர சிங் ஐரீ, 3.ஹர்திக் பாண்டியா, 4.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 5.சிகண்டர் ராசா.

இதேவேளை, குறித்த போட்டியில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இந்தியாவின் அர்ஷ்டீப் சிங், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 16ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு, 1.அடில் ரஷீட், 2.அகீல் ஹொஸைன், 3.ரஷீட் கான், 4.குடகேஷ் மோட்டி, 5. வனிது ஹசரங்க, 6.அடம் ஸாம்பா, 7.பஸல்ஹக் பரூக்கி, 8.அன்றிச் நொர்கியா, அர்ஷ்டீப் சிங், 10.மகேஷ் தீக்‌ஷன.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ட்ரெவிஸ் ஹெட், 2.சூரியகுமார் யாதவ், 3.பில் ஸோல்ட், 4.பாபர் அஸாம், 5.யஷஸ்வி ஜைஸ்வால், 6.மொஹமட் றிஸ்வான், 7.ஜொஸ் பட்லர், 8.நிக்கலஸ் பூரான், 9.ருத்துராக் கைகவாட், 10.ஜொஷ் இங்லிஸ்

## ஓய்வை அறிவித்த இனியஸ்டா

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா மற்றும் ஸ்பெய்னின் முன்னாள் மத்தியகளவீரரான அன்ட்றியஸ் இனியஸ்டா தனது ஓய்வை செவ்வாய்க்கிழமை (09) அறிவித்துள்ளார்.

ஸ்பெய்னுக்காக 131 போட்டிகளில் விளையாடிய 40 வயதான இனியஸ்டா இறுதி நேரத்தில் பெற்ற கோலின் காரணமாக 2010ஆம் ஆண்டில் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கிண்ணத்தை முதன்முறையாக ஸ்பெய்ன் கைப்பற்றியிருந்தது. தவிர 2008ஆம் ஆண்டு யூரோ கிண்ணத்தை ஸ்பெய்ன் வெல்லுவதற்கு இனியஸ்டா முக்கிய பங்காற்றியதுடன், 2012ஆம் ஆண்டு அதைத் தக்க வைக்கும்போது தொடரின் நாயகனாகத் தெரிவாகியிருந்தார்.



தனது 12ஆவது வயதில் பார்சிலோனாவின் லா மசியா இளைஞர் அகடமியில் இணைந்த இனியஸ்டா, 674 போட்டிகளில் பார்சிலோனாவுக்காக விளையாடியிருந்தார்.

## ஓய்வு பெறும் மகமதுல்லா

இந்தியாவுக்கெதிரான தொடரின் முடிவில் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலிருந்து மகமதுல்லா ஓய்வு பெறவுள்ளார்.

இதுவரையில் 139 போட்டிகளில் விளையாடியுள்ள 38 வயதான மகமதுல்லா 2,395 ஓட்டங்களைப் பெற்றுள்ளதோடு 40 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.





பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## பலமான நிலையில் இங்கிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில் பலமான நிலையில் இங்கிலாந்து காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முல்தானில் திங்கட்கிழமை (07) ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இங்கிலாந்து ஸக் குறோலி 78 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஷகீன் ஷா அஃப்ரிடியிடம் இழந்தது.

தொடர்ந்து வந்த பென் டக்கெட் வேகமாக ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 84 ஓட்டங்களுடன் ஆமிர் ஜமாலிடம் வீழ்ந்தார்.

இதனையடுத்து ஜோடி சேர்ந்த ஜோ றூட்டும், ஹரி ப்றூக்கும் தொடர்ந்தும் ஓட்டங்களைப் பெற்று வரும் நிலையில் மூன்றாம் நாள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 492 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் பெற்றுள்ள இங்கிலாந்து பாகிஸ்தானின் முதலாவது இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை விட 64 ஓட்டங்களே பின்தங்கியுள்ளது.

தற்போது களத்தில் றூட் 176 ஓட்டங்களுடனும், ப்றூக் 141 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர்.





இந்தியாவுக்கெதிரான

## முதலாவது டெஸ்டை தவறவிடும் வில்லியம்சன்

இலங்கைக்கெதிரான தொடரில் ஏற்பட்ட அடிவயிற்றுப் பகுதி உபாதை காரணமாக நியூசிலாந்திலிருந்து கேன் வில்லியம்சன் புறப்படுவது தாமதமாவதன் காரணமாக இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டை அவர் தவறவிடவுள்ளார்.

இந்நிலையில் மார்க் சப்மனை இந்தியாவுக்கெதிரான தொடருக்கான குழாமில் நியூசிலாந்து இணைத்துள்ளது.

இதேவேளை, மிஷெல் பிறேஸ்வெல் முதலாவது டெஸ்டுக்கு மாத்திரம் இருப்பார் என்பதோடு, பின்னர் தனது இரண்டாவது குழந்தையின் பிறப்புக்காக நியூசிலாந்து செல்லவுள்ளார்.

பிறேஸ்வெல்லின் பிரதியீடாக இரண்டாவது, மூன்றாவது டெஸ்டுகளுக்கு குழாமில் இஷ் சோதி இணையவுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 10, ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.